# கற்பகம்



விழிமலர் ஓரம்
கண்ணீர் பூக்கும் அன்னையின்
மண்ணையும் சூழும்
ஊழிப் பெருந்தீ நாக்கிடை
நீட்டி..... நெடுத்து
நிமிரும் எம் இலட்சியக் கொழுந்து
நம்பிக் கைத்தீபம்
ஏற்றிடும்
தடிநெடும்பனையாம் கற்பகத் தருவை
நேரே நோக்கி........

மலர் 6

இதழ் 8

கார்த்திகை 1985

விலை ரூபா: 2.00

# சுடர்



[illegible]

மலர் 6

இதழ் 8

கார்த்திகை 1985

விலை ரூபா: 2-00

கார்த்திகை

1985

மலர் 6

இதழ் 8

# சமாஜமும் ஏழாவது ஆண்டும்

'கற்பகம்' காரிகையினை கருத்தரித்து வெளியிட்டு வருகின்ற சமாசம் தனது ஆறுவது வயதினை அக்டோபர் 12 ம் திகதி பூர்த்தியாக்கியது. சமாஜம் சகல தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களையும் உள்ளடக்கிய இரண்டாம்படி கூட்டுறவு நிறுவனமாகவும், பனைப் பொருளாதாரத்துடன் பொருந்தியுள்ள பல ஆயிரம் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிலாளர்களது நிறுவனமாகவும், தொழிலாளர்களின் சமூகநலன்களை வளர்த்தெடுக்கும் சமூக நிறுவனமாகவும் இயங்கி வருகின்றது. இந்த நிறுவனம் இந்தக் குறுகிய கால கட்டத்தில் பல்வேறு தடைகளையும் தாண்டி ஒருசில சாதனைகளை ஈட்டியதை யாரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாது.

ஆறு ஆண்டு காலத்துள் சமாஜம் ஈட்டிய சாதனைகளை தொகுத்து விட்டால் வரிகுறைப்பு, விபத்து நல திட்டம், மாவட்ட அபிவிருத்தியில் பங்கெடுப்பு, பனை அபிவிருத்தி சபையில் தலைமைப் பொறுப்பு, 'கற்பகம்' பத்திரிகை வெளியிடல், வடிசாலை சமாஜம் அமைத்தல் ஆகிய ஆறு அம்சங்களாக நிரற்படுத்தலாம். எமது கடந்த கால சாதனைகளையும், பெருமைகளையும் நினைத்து மனப்பூரிப்படையாமல், நாம் விட்ட தவறுகளையும் அடையவேண்டிய இலக்குகளையும் ஆராய்ந்து கொள்வதே எதிர்காலத்திற்கு மிகப்பயனுடையதாகும்.

இந்தவகையில் சமாஜம், தனது அங்கத்துவ சங்கங்களின் எதிர்கால திட்டங்களை ஒழுங்கு படுத்திகொள்ளுமாறு அக்டோபர் 19ம் திகதி கலந்துரையாடல் ஒன்றை ஒழுங்குசெய்து நடாத்தியது. இதற்கு சகல சங்கங்களின் பிரதிநிதிக

வெளியீடு
வடமாகாண
தெ. ப. பொ. கூட்டுறவு
சங்கங்களின்
சமாஜம்
320, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி 22713

அட்டைப் படம்
ர மணி
லங்கா

அட்டைப்படக் கவிதை
கல்வயல்
வே. குமாரசாமி

ளும் கூட்டுறவு திணைக்கள அதிகாரிகளும் சமுக மளித்து தமது கருத்துகளை பரிமாற்றம் செய்து பொதுவான முடிவுகளுக்கு இணங்கினர். விபத்து நல திட்டத்தின் பயன்பாடுகளை அதிக ரிக்கத்தக்கதாக நடைமுறை விதிகளை திருத்து வதெனவும், 1986 முதல் கட்டாய சேமிப்புத் திட்டத்தை இளைப்பாற்று நிதி திட்டமாக மாற்று வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

சமாஜம் 1981ல் அங்கத்துவ சங்கங்கட்கும், அங்கத்தவர்களுக்கும் இடையே தொடர்பு சாத னமாகவும், சங்கங்களின் பொதுவானபிரச்சினை களை வெளிக்கொணர்ந்து பரிகாரம் காணவும், அங்கத்தவர்களிடையே கூட்டுறவு உணர்வை, கல்வி அறிவை ஏற்படுத்தவும் 'கற்பகம்' மாதப் பத்திரிகையை தொடக்கியது. இம்மாத பத்திரி கையானது மாத சஞ்சிகையாக வெளிவரவேண் டுமென்ற பலரது விருப்புக்கமைய 1984 முதல் சஞ்சிகையாக வரத்தொடங்கியது. கற்பகம் மாத சஞ்சிகையினை மேலும் மெருகூட்டி இன்றைய கால நிலைக்கு ஏற்ப பொருத்தமான அம்சங் களை சேர்த்தும், பொருத்தமற்றவற்றை விடுத் தும் பலராலும் விரும்பி வாசிக்கப்படுகின்ற ஜன சஞ்சிகையாக மாற்றவேண்டுமென்ற அபிமானி களினது வேண்டுகோளை நிறைவேற்ற சமாசம் முன்வந்துள்ளது.

எனவே சமாசம் தனது ஏழாவது ஆண் டில் காலடி எடுத்துவைத்துள்ள இவ்வேளையில் தனது மாத சஞ்சிகையினை மெருகூட்ட எடுத்த முயற்சிக்கு சமூகஆய்வாளர்கள், இலக்கிய கர்த் தாக்கள், கூட்டுறவாளர்கள், பனந்தொழில் ஆராய்ச்சி வல்லுனர்கள் போன்ற பல்வேறு நிலையினரது ஆதரவையும் ஆக்கங்களையும் வேண்டி நிற்கின்றது.

'கற்பகம்' தங்களது கைகளில் விரும்பிப் படிக்கின்ற ஜன சஞ்சிகையாக தவழ பல தரப் பட்டவர்களதும் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடை க்குமென்ற நம்பிக்கையுடன், விடைபெறுகின் றாள்; மெருகூட்டிய முதற் பிரதியாக வெளி வருகின்றாள். வணக்கம்.

# இன்பம் பொங்கும் தீபாவளி

செல்வி மாலினி சுப்பிரமணியம்

தமிழ்ப்பண்பாட்டைவிளக்கி நிலவும் விழாக்கள், பண்டிகைகளுள் தீபாவளிப் பண்டிகையும் அதிமுக்கியமானது. பெரிய உபகண்டம் எனப்படும் பாரத நாட்டில் வடக்கே காஷ்மீரம் முதல் தெற்கே கன்னியா குமரி வரையுள்ள பிரதேசங்களில் வாழும் மக்களின் தேசீய ஒருமைப் பாட்டைக் குறிக்கும் விழாக்களுள் தீபாவளியும் ஒன்று ஏழைகளும், செல்வந்தர்களும் எத்தொழிலைச் செய்து பிழைக்கினும் எல்லோரும் ஆண்டுக்கொரு முறை வருகின்ற தீபாவளியைத் தம் வாழ்வு மலரும் நாளாகக் கருதிக் கொண்டாடி மகிழ்கின்றார்கள்.

தீபாவளித் திருநாளின் தத்துவம் பெரிது. தீபம் என்றால் விளக்கு ஆவளி என்றால் வரிசை என்று கொண்டு தீபங்களின் வரிசை எனக் கருதுபவரும் உண்டு.

முன்னொரு காலத்திலே பௌமன் என்னும் அரசன் கடுந்தவம் செய்து இறைவனிடம் பல்வேறு வரங்களைப்பெற்று எல்லோரினும் மேலாக அரசு வீற்றிருந்து தான் விரும்பியபடி நடந்து அழிவுகளையும், அக்கிரமங்களையும் செய்து வந்தான். அவனது கொடுமைகளினால் எல்லோரும் அஞ்சி ஒதுங்கித் துன்பப்பட்டார்கள். நல்லவர்களுக்கு நாளும் நரக வேதனை கொடுத்து வந்தவன் நரகாசுரனானான். மக்கள் மனம் நோகாமல் உற்சாகம், குன்றாமல், உள்ளத்தில் வெளிச்சத்தையும், மகிழ்ச்சியையும், ஆரவாரத்தையும் உண்டாக்குதல் வேண்டுமென்று இறைவன் திருவருள் பாலித்து அசுரனை அழிக்கும் பொறுப்பு காத்தற் கடவுளரான கிருஷ்ணபரமாத்மாவுக்கு உண்டானது. அவர்தமது தேவியார் சத்தியபாமாவுடன் சென்று அசுர குலத்தை அழித்து நன்மையைச் செய்தருளினார்.

அழிவுகளைச் செய்து அழிந்து போன அசுரன் தன் இறுதி நேரத்தில் அழியாத பெரியபுகழைப் பெற்றுக்கொண்டான். தீமைகள் ஒழிந்து நன்மைகள் மலர்ந்து நல்லவர் வாழ்வும் ஒளியும் பெற்ற நன்னாளாய அன்று தன் பெயரை எல்லோரும் நினைவிற் கொள்ள வேண்டுமென்று அவன் கேட்ட வரமே தீபாவளித் திருநாளாகும். எவர் எங்கே எவ்விதமாகக் கொண்டாடினாலும் தீபாவளி, நவராத்திரி விழாவைப் போன்று ஒரு வெற்றித்திருநாளாகும்.

'கற்பகம்' வாசகர்களுக்கு

எமது உளங்கனிந்த

தீபாவளி வாழ்த்துக்கள்



# அந்த இந்த நாளும்

கோப்பாய் சி. இலட்சுமிகாந்தன்

வானிலே இடி கேட்டு
வாரி விதை நெல் கொண்டு
வயலுக்குச் சென்ற நாள்
அது அந்த நாள்

வானிலே வெடி கேட்டு
வயல் நிலத்தைத் தான் விட்டு
வாயடைத்து நின்ற நாள்
இது இந்த நாள்

மாலையிட்ட மங்கையர்கள்
மானமது காப்பதற்கு
சேலையுடன் பொட்டிட்டு
செருக்குடன் சென்ற நாள்
அது அந்த நாள்

சேலையது பாரமென்றும்
வேலையது இலகு என்றும்
வேடிக்கை காட்டுகின்ற
சட்டைகளைத் தாம் போட்டு
பெட்டைகளாய் மாறும் நாள்
இது இந்த நாள்

பணத்திற்கும் குலத்திற்கும்
பதவிகளும் பட்டங்களும்
பகட்டாகக் கொடுத்த நாள்
அது அந்த நாள்

படிப்பிற்கும் துடிப்பிற்கும்
பதவிகளும் பட்டங்களும்
பண்போடு கொடுக்கும் நாள்
இது இந்த நாள்.

உயிரியல் கட்டுப்பாட்டுப் போரில்
சுவையான அனுபவங்கள்:

# அழிக்கும் உயிரினங்களை ஒழிக்கும் பூச்சி இனங்கள்

திருமதி. பொன்மணி சின்னத்தம்பி பி. எஸ்ஸி.

ஓர் உயிரினத்தை இன்னோர் உயிரினத்தினல் கட்டுப்படுத்தும் உயிரியல் கட்டுப்பாட்டு முறை இன்று உயிரியலாளர்களினல் கைக் கொள்ளப்பட்டு வருகின்றது. இவ் உயிரினம் ஓர் ஒட்டுண்ணியாகவோ, உண்டு அழிக்கும் ஓர் இனமாகவோ, ஒரு நோயாகவோ அமையலாம். வைரசுவையும் ஓர் உயிரினமாகத்தான் இங்கு கருதப்படுகிறது. ஒரு பூச்சிப் பீடையையோ, ஒரு களையையோ இம்முறையைக் கையாண்டு கட்டுப்படுத்தும் முறை கமத்தொழிற்துறையில் முதன்மை பெற்று வருகின்றது.

ஐசிரா பேர்ச் செசி என்னும் செதிற் பூச்சி தவறுதலாக அவுஸ்திரேலியாவிலிருந்து கலிபோர்ணியாவுக்கு 1860 ம் ஆண்டளவில் பரவியது. 1887 ம் ஆண்டில் அது அங்குள்ள எலுமிச்சை மரங்களைப் பெரிதும்பாதித்தது. அந்நாட்டில் சி. வி. றைலி என்பவர் பூச்சிக் கட்டுப்பாட்டுத்துறைக்கு முதல்வராக இருந்தார். இப்பீடையைக் கட்டுப்படுத்த உயிரியல் கட்டுப்பாட்டு முறையே சிறந்ததென்று முடிவெடுத்தார். ஆனல் அரசாங்கத்தினல் அதற்குப் போதிய நிதி வழங்கப்படவில்லை. அதிர்ஷ்டவசமாகக் கமத்தொழில் ஆணையாளர் ஒரு அரசியல்வாதி மட்டோடு அமையாது அவர் ஒரு விஞ்ஞானியாகவும் விளங்கினர். 1888 ம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் ஒரு கண்காட்சி ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு றைலியின் சக உத்தியோகத்தராகிய அப்பேட் கோபியை அமெரிக்க அரசாங்கம் உத்தியோக பூர்வமாக சமூகமளிக்க அனுமதித்தனர்.

> சாயக் கைத்தொழிலுக்காக வளர்க்கப்பட்ட நாகதாளி மரங்கள் அவுஸ்திரேலியாவில் 60,000,000 ஏக்கர் நிலத்தைமுற்ருக மூடிவிட்ட அதிசயம் இது. இந்நாகதாளிகளை ஒழிக்க 30 ஆண்டுகள் கடும் போராட்டம் நடாத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ் வைபவத்துக்குச் சென்ற அப்பேட் கோபியை இச் செதிள் பூச்சிகளைத் தாக்கும் பூச்சிகளைத் தேடிக் கலிபோர்ணியாவிற்கு

அனுப்பும்படி அக்கமத்தொழில் ஆணையாளர் உத்தியோக பூர்வ மற்ற முறையில் வேண்டினர். எனவே அங்கு சென்ற அப்பேட் கோபி அவுஸ்திரேலியாவின் அடிலெயிட் பகுதியில் ஒரு தோட்டத்தில் இச் செதிள் பூச்சிகளை உண்ணும் "ரேடோலியா காற்டினலிற்" என்னும் வண்டுகளையும், "கிறீப்ரோகீற்றம் ஐசிற்யே" என்னும் ஒட்டுண்ணிகளையும் அனுப்பினர் இவ் ஒட்டுண்ணிகள் இப் பணியில் தோல்வியே கண்டன.

ஆனல் இவ் வண்டுகள் பன்மடங்காகப் பெருகி அதன் வண்டுப் பருவமும், புழுப் பருவமும் இச் செதிள் பூச்சியை உண்ண ஆரம்பித்தன ஐந்து வருடங்களுள் இப் பீடை கட்டுப்படுத்தப் பட்டது. இடையில் ஒரு முறை அங்கு தெளித்த பூச்சி நாசினியால் இவ்வண்டுகள் கொல்லப்பட்டு இப் பீடைத் தொல்லை மேலோங்கியது. ஆனலும் இவ்வண்டுகளின் தொகை திரும்பவும் பெருகிப் பீடைத் தொல்லையைக் களைந்தது.

புளோரிடா, ஹவாய், நியூசிலாந்து, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளிலும் இப் பீடையைக் கட்டுப்படுத்த இவ் வண்டுகளே உதவின. எத்தனையோ அமெரிக்க அரசியல் வாதிகள் இத் திட்டத்திற்கு


குறைந்த வாடகை! நிறைந்த பயன்!!
உங்கள் இல்லங்களில் இடம் பெறும்

இனிய வைபவங்கள் சிறக்க,

வரும் விருந்தினர்களை வரவேற்று உபசரித்துக் கௌரவிப்பதற்கு வேண்டிய

★ இரும்புக்கதிரைகள்
★ வாங்குகள்
★ எவர்சில்வர் கப்
★ றே

ஆகியவற்றைக் குறைந்த வாடகையில் பெற
எம்மை நாடுங்கள்

அரியாலை தெங்கு பனம் பொருள்
உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம்

இல 15, நடுத்தெரு லேன், கண்டி வீதி, அரியாலை

எதிராகத் தூற்றினர். கண்டித்தனர், பிரசுரங்களை வெளியிட்டனர். ஆனால் இவ் வெற்றி இம் மாபெரும் சாதனையை எதிர்த்தவர்களையே வெட்க வைத்தது.

### நாட்டை மூடிய நாகதாளி

பல இன நாகதாளி மரங்களைத் தென் அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து அவுஸ்திரேலியாவிற்கு இறக்குமதி செய்தனர். இந் நாகதாளிகளில் ஓர் இனத்தை உண்ணும் 'மீலி பக்' என்னும் பூச்சியிலிருந்து ஒரு வகைச் சாயம் எடுக்கும் கைத்தொழிலொன்றை உருவாக்குவதற்கும், ஏனைய இனங்கள் கவர்ச்சிக்காக வீடுகளில் வளர்க்கவும் இறக்குமதி செய்யப்பட்டன. இச்சம்பவம் 1788 ம் ஆண்டு நிகழ்ந்தது. ஏறக்குறைய 1900 ம் ஆண்டளவில் 40,500 சதுர கி. மீ. அளவு நிலத்தை மூடத் தொடங்கியது.

1925 ம் ஆண்டு மொத்தம் 60,000,000 ஏக்கர் நிலம் நாகதாளி மரங்களால் மூடப்பட்டிருந்தது. மனிதனோ, மிருகமோ உட்புக முடியாது அடர்ந்து காணப்பட்டது. களைக்கொல்லி கொண்டு அழித்தல். அல்லது மனிதனால் வெட்டி எரித்துச் சுத்தம் செய்தல் அந்த நிலத்தின் பெறுமதியை விடக் கூடச் செலவழியும் எனக் கணக்கிடப்பட்டது. உயிரியலாட்சி வழிதான் சிறந்த ஒரேயொரு முறை என்ற முடிவும் எடுக்கப்பட்டது.

1903 ம் ஆண்டிலும், 1913 ம் ஆண்டிலும் 'டக்ரிலோபியஸ் இன்டிக்கஸ்' என்னும் பூச்சிகளை இந்நாகதாளி மரங்களை உண்ணுவதற்காக விட்டனர். இப்பூச்சிகள் நாகதாளியின் சில வர்க்கங்களையே அழித்தன. 1925 ம் ஆண்டு ஆர்ஜென்ரைனாவிலிருந்து 'கக்ரோபிளாஸ்ரஸ் கக்ரோறம்' என்னும் பூச்சியை வரவழைத்து இந்நாகதாளிகள் உண்ணவிடப்பட்டன. 1930 ம் ஆண்டு இந்நிலம் விவசாய நிலமாக மாறியது. இப்பூச்சியின் மகிமையை மறக்காத அந்த நாட்டு மக்கள் ஞாபகக்கல் நாட்டி இப்பூச்சியின் செயலை எழுத்தில் பொறித்திருக்கின்றனர்

### 120 பூச்சிப் பீடைகளை ஒழிக்க 253 திட்டங்கள்

கலிபோர்னியாப் பல்கலைக்கழக உயிரியலாட்சித்துறைப் பேராசிரியர் போல்டீ பாக்கின் கூற்றின்படி 120 பூச்சிப் பீடைகள் இதுவரை இவ் உயிரியலாட்சித் திட்டத்தின் கீழ் மொத்தமாகக் கட்டுப்படுத்தப்பட்டன. இதுவரை மொத்தம் 253 திட்டங்கள் மேற்

கொள்ளப்பட்டிருக்கின்றன. இஸ்ரவேலில் எலுமிச்சை மரத்தில் "மீலி பக்" பூச்சியையும், ஐப்பானில் செம்மெழுகுச் செதில் பூச்சியையும், கலிபோர்னியாவிலும் ஏனைய நாடுகளிலும் கத்தரிப்பூ நிறச் செதிள் பூச்சியையும், கலிபோர்னியாவில் ஒலிவ் செதில் பூச்சியையும், கனடாவில் மாரிகால அந்துப் பூச்சியையும், அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் நாடுகளில் பச்சை மரக்கறி வண்டையும், பிஜி தீவில் தென்னை அந்துப் பூச்சியையும், தென்னைச் செதிள் பூச்சியையும், தென்னையோலையைத் துளைத்துண்ணும் "புரூமிக் கோதீக்கர்' வண்டையும், கென்யாவில் கோப்பி மீலி பக் பூச்சியையும் இன்னும் பல திட்டங்களையும் கையாண்டு வெற்றி காணப் பட்டுள்ளது.

இலங்கையில் தென்னைச் செதிள் பூச்சியையும், தென்னையோலையைத் துளைத்துண்ணும் வண்டையும், அவுஸ்திரேலியாவில் ஓர் இன வைரஸைப் பயன்படுத்தி முயலின் தொல்லையையும் பல நாடுகளில் பசிலஸ் என்னும் பற்றீரியங்களை விடுத்து எத்தனையோ மரக்கறிப் பூச்சிகளையும் அழித்துச் சாதனை புரியப்பட்டுள்ளது.

## இயற்கை விரோதிகளும் நாமும்

பூச்சிகள் உலகில் பெரும் பங்கு கொண்டவை. பெருந்தொகையான பூச்சிகள் பூச்சிகளையே உண்டு வாழ்வன. சிறுதொகையான பூச்சிகள் தாவர வர்க்கங்களை உண்டு வாழ்வன. ஒட்டுண்ணிகள் தமதினத்தைப் பெருக்குவதற்காகத் தமக்கென உள்ள பூச்சிகளின் பருவங்களாகிய புழு, கூட்டுப்புழு என்பனவற்றில் தம் முட்டைகளை இடும். முட்டைகள் சிறியகால எல்லையுள் பொரிக்கப்பட்டுப் புழுக்களாகி அவை அப்பூச்சிகளின் உடம்பின் சத்துக்களை உண்டு அவைகளை அழிக்கின்றன. நுண்ணுயிர்களாகிய பூஞ்சணம், பற்றீரியம், வைரசு என்பனவும் இதே மாதிரிப் பிறிதோர் உயிரினங்களின் உடம்பில் பெருகி அவைகளை அழிக்கின்றன. பூச்சிகளையும், தாவரங்களையும் உண்ணும் உயிரினங்களும் அங்கே சென்று அவைகளை உண்டு அழிக்கின்றன.

நாகதாளி போன்ற தாவர வர்க்கங்களை உண்டு அழிக்கும் பூச்சிகளை ஒரு நாட்டிற்குப் புதிதாகக் கொண்டு வரும் போது மிக மிகக் கவனமாக இருத்தல் வேண்டும். அவை வெளியேற முடியாத அறைகளில் அதாவது கடும் காவலில் வைத்துப் பரிசோதனை செய்துதான் அறிமுகப்படுத்த வேண்டும். இப் பூச்சிகள் எமக்குப்

பயனளிக்கும் ஏதேனுமொரு தாவரத்தை உண்ணுகிறதா எனப் பரீட்சித்துப் பார்த்துத்தான் வெளிவிடல் வேண்டும்.

ஆனால் பூச்சியைத் தாக்கும் பூச்சிகளை ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கு அறிமுகப்படுத்தும் போது அவைகளையே அழிக்க வல்ல ஒட்டுண்ணிகளைத் தம்முடன் கொண்டு வந்திருக்கின்றனவா என்றும், அவை எமது நாட்டிலுள்ள உபயோகமான பூச்சிகளைத் தாக்குகிறதா என்றும் அவதானிப்பது முக்கியம்.

இயற்கை விரோதி கண்டபடி பல இன உயிர்களையும் அழிக்க நாடாது ஓர் இனத்தையே நாடுவனவாயும் அமைந்து கால கதியில் இவ் இயற்கை விரோதிகளைத் தேடிக் கொள்ளாது இருந்து மனிதன் பூச்சி நாசினி, கிருமி நாசினி, என்பனவற்றைத் தெளித்துச் சூழலை மாசு படுத்தாதுவிடின் அது ஒரு வெற்றிகரமான உயிரியலாட்சித் திட்டமாகிறது. ஓர் இயற்கை விரோதியைப் பிற நாட்டிலிருந்து கொண்டு வரும் போது அதன் விரோதியை நாம் அங்கேயே விட்டு விட்டு வருகிறோம். அதனால்தான் இறக்குமதி செய்த ஓர் இயற்கை விரோதி எமக்கு வெற்றியை ஈட்டித் தருகின்றது.


காந்திஜீயின் பொன்மொழிகள்

## ஏழ்மையை விரட்ட.....

"பதநீரைத் தேனுக்கு ஒப்பான இனிய வெல்லமாக மாற்றமுடியும். இவ் வெல்லம் கரும்பு வெல்லத்தைவிடச் சிறந்தது. கரும்பு வெல்லம் கருமையானது. ஆனால் பனை வெல்லமோ இனிப்பும் அதைவிட ருசியும் உடையது. இதில் அநேக விதமான உலோக உப்புகள் உள்ளன; வைத்தியர்கள் என்னிடம் வெல்லம் சாப்பிடச் சொன்னார்கள். அதனால் நான் எப்பொழுதும் பனை வெல்லமே சாப்பிடுகிறேன். ஆலைகளில் கூட உற்பத்தி செய்ய முடியாத முறையில் இயற்கை இந்தப் பொருளை உண்டாக்கியிருக்கிறது. இவ்வெல்ல உற்பத்தி குடிசைகளிலேயே நடைபெறுகிறது. பனைமரங்கள் உள்ள இடங்களில் இதைச் சுலபமாக உற்பத்தி செய்யலாம். ஆந்திராவில் ஆயிரக்கணக்கான பனை மரங்கள் உள்ளன. அங்கு ஒவ்வொரு கிராமத்திலும் இவ்வெல்லம் தயாராகிறது. செய்யப்படுகிறது. இந்த நாட்டிலிருந்து ஏழ்மையை விரட்ட இது ஒரு வழி. இது ஏழ்மைக்கு மாற்று மருந்தாகவும் அமையும்."

-- மகாத்மா காந்தி.

மேலுறைகளைச் சேகரித்தனுப்பி பரிசில்களைப் பெறுங்கள்!

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த, பெ. இல. 77 யாழ்ப்பாணம்

மில்க்வைற் தயாரிப்புக்களை வாங்கி உபயோகியுங்கள்!

# உண்மை சுடும்....

★ கே. வி. என்.

தொடர்கதை

சிகரெட் கேசை திறந்து முதலில் முருகேசு வாத்தியாரைப் பார்த்து ''சிகரெட்'' என்று நீட்டினேன்.

''நோ, தாங்ஸ்'' எனக் கூறி சிகரெட்டைப் பார்த்து தனது கையால் ஆசீர்வதித்தார்.

'ஏன்? ... அந்த நாட்களில் அறம் புறமாகச் சிகரெட் பற்றிய வராயிற்றே' என்ற நினைப்புடன் அவர் உதடுகளைப் பார்க்கின்றேன்.

கறுத்துக் கரிஓடாகக் காட்சி அளிக்கும் அவர் உதடுகள் கூறு பவை பொய்யா? அவர்தொடர்ந்தும் சிகரெட் பிடிப்பவர்தான் என்பது என் நெஞ்சில் உறுதியாயிற்று.

திடீரென அவர் எழுந்து என் கைகளைச்சேர்த்து தன் இருகரங்களாலும் அணைத்தவாறு,

''அன்று அதை நான் தெரியாத்தனமாகச் செய்துவிட்டேன் மிஸ்ரர் சின்னராசா. மிருகத்தை விட மிகவும் மோசமாக உங்களிடத்தில் நடந்துகொண்டேன். அதற்காக நீங்கள் என்னை மன்னிக்க வேண்டும். றியலி, ஐ வாஸ் ஏ பூல் மிஸ்ரர் சின்னராசா, யேஸ், றியலி, ஐ வாஸ் ஏ பூல்''

நான் அசை போட்டுக்கொண்டிருந்த அந்தப் பழைய சம்பவங்களையே முருகேசு வாத்தியாரும்

**முன்கதைச் சுருக்கம்**

**சின்னராசா ஒரு பொலிஸ் அதிகாரி. அவரிடம் விசாரணையொன்றிற்காகப் பொலிஸ் நிலையம் செல்லும் முருகேசு மாஸ்டர் பொலிஸ் அதிகாரி யார் என்பதை அறிந்து திடுக்கிடுகிறுர். பீதிக்குள்ளாகினுர். சின்னராசா முருகேசு மாஸ்ரரிடம் படித்த மாணவன். ஒருநாள் முருகேசு மாஸ்டர் சின்னராசாவை வகுப்பறையில் வைத்து மிருகத்தனமாகத் தாக்குகின்றுர். இனியும் அடி பொறுக்க முடியாத நிலையில் சின்னராசா மேசையை மாஸ்டர் மேல் தூக்கிப் போட்டு விட்டு ஓடி விடுகின்றுன். அதன் பின்பு பொலிஸ் நிலையத்தில்தான் முருகேசு மாஸ்டரைச் சந்திக்கின்றுன்.**

நினைத்துக் கொண்டிருந்திருக்கிறுர் என்பது இதிலிருந்து எனக்குத் தெளிவாயிற்று. அது தவிர்க்கேலாததும் கூடத்தான்.

ஒருவேளை குற்றம்புரிந்தவன் நாஞக இருந்து இப்போதிருக்கும் அதிகார பீடத்திலும் அமர்ந்தி

## 'மினி' கவிதை

### புற்றுக்கள்!

புத்தகங்களை
அரிக்கும் கறையான்களே
உங்கள் இரக்கமற்ற
குணத்தால் தான்
உங்கள் புற்றுக்களில்
பாம்புகள்
குடி கொள்கின்றன.

— அரஸ்

* * *

### பணத் தேன்

நாங்கள்
கல்யாணம் செய்த
இள மலர்கள்
எங்கள் வண்டுகள்
வெளிநாடுகளில்
பணத் தேனுக்காக
அலைந்து திரிகின்றன.

— அரஸ்

* * *

### மனிதருள் மாணிக்கங்கள்

சமுதாயப் பெருங்கடலில்
சீதனச் சுழல் காற்றில்
சிக்கித் தடுமாறும்
கன்னித் தோணிகளைக்
கரை சேர்க்கும்
கலங்கரை விளக்கங்களாய்
உதவும் ஆண்களே
மனிதருள் மாணிக்கங்கள்.

- சிவயோகமலர்

ருப்பேனுயானுல் குற்றமிழைக்கப் பட்ட மனிதனின் சிந்தனைக ளையோ, நினைவுகளையோ கிஞ் சித்தும் பொருட்படுத்தாமல் மிகத்துச்சமாகவும், அலட்சியமா கவும் நினைத்து நடந்து கொண்டி ருக்கவும் கூடும். குற்றமிழைத்த மனிதன் முருகேசு இந்த ஸ்தா னத்தில் இன்று இருந்து நான் வெறும் சின்னராசாவாக அவ ரைப்போலவே இன்று இங்கு வந்திருப்பேனேயானுல்... முரு கேசு எப்படி நடந்துகொண்டிருப் பார் என்பது சொல்லாமலே விளங்குமே.

இப்போதிருக்கும் எனது பொலீஸ் அதிகாரத்தை வைத்து பழைய சங்கதிகளுக்காக பழி வாங்கும் படலத்தில் இறங்கி விடுவானே? என்ற பேதைமை நினைப்பால் எழுந்த பயப்பிராந் தியின் சாயல் முருகேசுவின் முகத்தைவிட்டு இன்னமும் அகல வில்லை என்பது உண்மையே. அதற்கேற்றாற்போல் அன்று என்னை நெகிட்டெடுத்த பூவர சம் தடிகளை அவருக்கு நினைவூட் டும் பாணியில் என்மேசையில் அவரை முழுசிப்பார்த்துக்கொண் டிருக்கும் பற்றன் பொல்லை அடிக் கடி பார்த்து மருண்டுகொண்டி ருக்கிறுர் என்பதும் தெரிகிறது.

''ஓ, டோன்ற் யூ பீ திங் சில்லி, ஐ பொகெற் எவிறிதிங் மாஸ்ரர். தற் இஸ் ஏ மைனர் மாற்றர்''

என் உதட்டின் ஓரத்தில் ஒரே யடியாக ஒட்டிவிட்ட சிகரெட் விரல்களுடன் வர மறுக்கின்றது, அதை உரித்தெடுக்கும் பாவனை காட்டி முருகேசுவின் கண்களை உற்று நோக்குகின்றேன்.

என் கூற்றை முருகேசு இன்னமும் முற்ருக நம்ப மறுப்பது அவர் விழிகளில் தெரிந்தது. 'இன்னும் உன்னை நம்ப முடியவில்லை. இப்படிச் சொல்லிச் சொல்லி கடைசியில் பொலீஸ்காறங்கடை கைவரிசையைக் காட்டிவிட்டாயாக இருந்தால்...' என்ற தோரணையிலே அந்த விழிகள் எனக்கு படுகின்றன,

சிகரெட்டை உதட்டிலிருந்து உரித்தெடுத்த நான் எனது மூக்கின் பள்ளத்தில் ஆள்காட்டி விரலிஞல் அழுத்தித் தேய்க்கும் போது அவர் பார்க்கும் பார்வையின் பரிதாபகரமான அர்த்தம், அந்த நாளைய நினைவுகளும் நிகழ்ச்சிகளும் என் மூக்கின் நுனியில் வந்து நின்று விறுவிறுத்து வியர்ப்பதாகப் பட்டிருக்கவேண்டும் முருகேசுவுக்கு.

பின்பு, என் பார்வையின் கூர்மையைத் தொடர்ந்தும் தாங்க மாட்டாத முருகேசு தலையைக் கவிழ்த்துப் போட்டுக்கொண்டே என் மேசையைப் பார்க்கின்ருர்.

பின்பு திடீரென்று அவர் சொன்ஞர்.

''நீங்கள் நிறையச் சிகரெட் குடிக்கிறீர்கள் போலை கிடக்குது. இப்படித் தொடர்ந்து குடித்தால் உடம்புக்குக் கூடாது'' என்ருர் முருகேசு.

''யேஸ், என்ன செய்வது?... ஹபிற்ருகப் போச்சுது.'' என்ற கையுடன் 'சாத்தான் வேதம் ஓதிய கதையாம்' என்று எனக்குள் வந்த நினைப்புக்கிடையில்

# சிரி! சிரி! சிரி!!!

ஒருவர்: மகனை எங்கே கூட்டிக் கொண்டு போகிறீர்கள்.

மற்றவர்: ரீ. வி. வீடியோ வந்த படியால் மகனுக்குத் தியேட்டர் தெரியாதாம். அது தான் காட்டக் கூட்டிக் கொண்டு போறன்.

ஒருவர்: ?????

✤ ✤ ✤

ஒருவர்: நாடக வளர்ச்சி குறைந்து விட்டது. அதுதான் கவலையாக இருக்கிறது.

மற்றவர்: ஏன்? பயங்கர நாடகம் தினம் தினம் நடைபெறுகின்றனவே?

ஒருவர்: ?????

✤ ✤ ✤

ஒருவர்: கலியாணத்தை ஜாம் ஜாம்... என்று செய்து விட்டீர்கள் எப்படி?

மற்றவர்; எல்லாம் 'ஜாம்' விற்ற காசில்தான்.

✤ ✤ ✤

இளைஞன்: 'பம்பாய்' என்றதும் அலர்ஜியாக உள்ளது.

வயோதிபர்: ஏன் தம்பி?

இளை: அங்குதான் ஏஜென்சி என்னை ஏமாற்றிவிட்டு மறைந்தவன். அதுதான்.

- கேசரி

முருகேசு தனது சிகரெட் இருமலை அடக்கேலாதவராக 'சள் சள்' என்று சால்வைத் தலைப் பால் வாயைப் பொத்தி இருமி 'சொல்வது சுலபம், செய்து காட்டுவதுதான் கடினம்' என்ற எனது நினைவுக்கு உதாரணம் காட்டுவதாக இருந்தது அவரது இருமல்.

சிகரெட் குடித்துக் குடித்து கருகிக் கறுத்துப் போய்விட்ட அவரது முகமும் உதடுகளும் அவர் ஒரு செயின் சிமோக்கர் என்பதை முத்திரை பதிப்பித்து வைத்திருக்கின்றன.

ஆம்! அது எனக்கு முன்பே தெரிந்ததுதான்; முருகேசு ஒரு செயின் சிமோக்கர்தான் என்பது.

அன்று என்னை அடிப்பதற்குச் சற்று நேரத்திற்கு முன்பு- உடலின் நரம்பு நாளங்களில் மதுவின் வெறியை ஏற்றி ஓடவிட்டு உஷார்படுத்திக் கொண்டு திட்டமிட்டுக்குற்றங்கள் புரிபவர்களைப் போன்று – பல சிகரெட்டுக்களை இழுத்து இழுத்து புகைத்து எறிந்த பின்பேதான் என்னை முருகேசு அன்று நொருக்கித் தள்ளினார். அப்போது தான் அவருக்கு அந்தச் சிகரெட்டுக்கள் அளித்த உஷார் நிலை வந்தது போலும்!

இப்போது பல சிகரெட்டுகளை விடாமல் தொடர்ந்து அடுக்கடுக்காகப் புகைத்துத் தள்ளிக் கொண்டு முருகேசுவின் முன்னால் இருக்கும் என்னைப்பற்றி அவர் பலவாருக நினைத்திருக்கலாம்.

'அன்று என்னை உன் முன்னால் வைத்துக்கொண்டு எத்தனை சிகரெட்டுக்களை இழுத்து இழுத்துப் புகைத்து ஊதித் தள்ளினீரே, இன்று இதோபாரும்: அதற்குக் காட்டிலும் மேலாக புகைத்துத் தள்ளி உம்மைப் பழித்துக் காட்டுகின்றேனே' என்பதாகவும் முருகேசு வாத்தியார் நினைத்திருக்கலாம். அல்லது அன்று தான்செய்ததைப் போன்றே சிகரெட் வெறியை உடலில் ஏற்றிக்கொண்டுதான் என்னை நெகிட்டெறியப் போகிறுனுக்கும் என்றும் கருதலாம்.

உண்மையில் அன்றைய எதற்குமாக அவரைப் பழித்துக் காட்டி இழிவு படுத்திவிட வேண்டும் என்ற எண்ணம் என்னிடத்தில் கிஞ்சித்தும் இதுவரைஏற்பட்டதுமில்லை, இனிமேல் ஏற்படப்போவதுமில்லை. சிகரெட் குடிப்பதென்பது இன்றைய எனது தவிர்க்க இயலாத பழக்கங்கள் சிலதில் இதுகும் ஒன்முகி விட்டதென்பது தான் உண்மை.

முருகேசு வாத்தியார் ஒன்றைத் தொட்டுக் கேட்டு கதையை வேறு திசைக்கு மாற்ற எடுக்கும் பிரயத்தனங்களை நான் நன்கு அறிவேன். ஆனுல் அவர் எடுத்துத் தரும் ஒவ்வொரு அடியின் தொடக்கமும் எங்களிருவருக்கும் பொதுவான ஏதோவொரு வகையில் உடன்பாடான சங்கதிகளாகவே அமைந்து வருவது துரதிர்ஷ்

டமானதுதான். அவர் கேட்கும் அந்த ஒவ்வொன்றுள்ளுமே நான் அமுங்கி அமுங்கிப்போய் எங்கோ சஞ்சரித்து மீளுவது; எங்கிருந்து வருகிறேன் என்பது நிச்சயம் முருகேசுவுக்கும் தெரியும்.

அதற்கு நான் என்ன செய்வேன்?

அன்றைய எனது பள்ளிக்கூட நாட்களின் அந்தப் பழைய சம்பவங்களையும், நிகழ்ச்சிகளையும் கூடவா நான் நினைத்தும் பார்க்கக் கூடாது? அந்தக் கொடுமையான நிகழ்ச்சியின் பின்பும் முருகேசு வாத்தியாரைத் தொடர்ந்தும் சந்தித்து வந்திருப்பேனேயானால் அது இவ்வளவு விஸ்வரூப நினைவுகளாகி இருக்காமல் சகஜ நிலைக்கு எப்போதோ வந்திருக்கும். ஆனால் அன்றைத் தினத்திற்குப் பின்பு திடீரென்று இன்று முருகேசு வாத்தியாரைக் கண்ட போது அந்த நாட்களின் நினைவுகள் என்னையும் அறியாமல் திமிறித்திமிறி வெளிவருகின்றனவே.

என்னுள்ளேயே பிறிதொரு மனம் இப்படியும் நினைக்கின்றது. ஏன் நினைக்கக் கூடாது? ஒவ்வொருத்தர்பட்ட துன்பம், துயரம், இன்னல்கள், இடர்ப்பாடுகளை

---


## அடுத்த இதழில்
## ஆரம்பமாகிறது!

# "தமிழகத்தில் பனை வளம்"

### பயணப் பேட்டிக் கட்டுரை

பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவரும், வடபகுதியில் தெங்கு, பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜச் செயலாளருமாகிய

**திரு. க. நடராசா அவர்கள்**

அண்மையில் இந்தியா சென்று இந்திய அரசின் அனுசரணையுடன் தமிழகத்தில் பனை வள அபிவிருத்தி பற்றிய ஆய்வுப் பயணத்தை மேற் கொண்டிருந்தார்.

அவர் இந்தியா, இலங்கை நாடுகளின் பனம் பொருள் அபிவிருத்தி பற்றிச் சுவைபடக் கூறும் பேட்டிக் கட்டுரை இது.

எல்லாம் இப்படிப்பட்ட சில வேளைகளில்தானே. அதுகும் அதற்கு மிக நெருங்கிய உடன் பாடானமனிதர்களேயோ, இடங் களேயோ, சம்பவங்களேயோ– காணும்போதுதானே நினைவுகூர வேண்டி இருக்கின்றது. அதுகும் தவிர எந்த ஒரு மனிதனின் வாழ்க்கையிலும் பள்ளிக்கூட நாட்களே இன்பமானவையும் இனிமையானவையும். அந்த நாட்களை நினைத்து இன்றைய துன்பமனிதர்களாகிவிட்டவர்கள் கூட 'ஏன் பெரியவனுனேன்? அந் தப்பள்ளிக்கூட நாட்கள் மறுபடி யும் இனிமேல் வரமாட்டாதா?', என்று கூட ஏங்கி சிலவேளைகளில் பெருமூச்சுகளிடையே நினைவு கூருவதைக் காண்கிருேம்.

ஆனுலும் எனது பள்ளிக்கூட வாழ்க்கை ஒருபோதும் இன்ப மயமானதாக இருக்கவில்லை. அந்த வகையில் நான் மிகவும் துரதிர்ஷ்டசாலிதான். ஆனுலும் எனது பள்ளிக்கூடத்து துன்பம் துயர் நிறைந்த நாட்களின் நினை வுகளை அதற்காக நினைத்துப் பார்க்க கூடாததொன்றல்ல. நிச் சயம் மரண ஓலம்நிறைந்த எனது அந்த நாட்கள்தான் முதலில் நினைவு கூரப்பட வேண்டிய விஷ யங்கள்... அவைகள் இன்றும் என் நெஞ்சில் மிகவும் பசுமையா னவையே.

எனது அமுக்கம் நிறைந்த ஆழ்ந்த நினைவுச் சஞ்சரிப்புகளால் முருகேசு வாத்தியாரைத்

## எழுதுங்கள்!

எமது 'கற்பகம்' சஞ்சி கைக்கு எழுத்தார்வம் மிக் கவர்களின் சிறுகதை, கவிதை, கருத்தாழமும் நவீ னத்துவமுமான கட்டுரை கள், துணுக்குகள் வரவேற் கப்படுகின்றன. தகுதியா னவை 'கற்பக'த்தில் பிரசுர மாகும். விடயங்கள் தாளின் ஒரு பக்கத்திலேயே எழுதப் பட்டிருக்க வேண்டும்.

'கற்பகம்' பற்றியஉங்கள் எண்ணங்களையும் எழுதுங் கள். உங்கள் எழுத்தோவி யங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:-

**ஆசிரியர்,**
**''கற்பகம்''**
**330. கே. கே. எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொடர்ந்தும் பயத்திற்குள்ளா காமலும், வேதனைக்குள்ளாகாம லும் தடுக்கும் பொருட்டு அவரு டன் கதைக்க விரும்புகின்றேன்.

''வெல், மாஸ்ரர். ஸ்ரில், ஆயூ ரீச்சிங் தெயர்.''

இது பச்சைப் பகிடியான கேள்வியொன்றுதான். முருகேசு வாத்தியார் இதற்கு அர்த்தம் கற்பித்துக் கொள்வார் என்றே நான் கருதுகிறேன்.

ஏனெனில் முருகேசு வாத்தி யார் அன்று ஒருபோதும் அந்த

அமெரிக்கன் மிஷன் பாடசாலை யல் உத்தியோக பூர்வமான ஒரு ஆசிரியராக நியமனம் பெற்றி ருக்கவில்லை என்பது எனக்கு முன் னரே தெரிந்ததுதான். உத்தி யோகப்பற்றற்ற ஆசிரியனுக இருந் தார் என்றும் சொல்வதற்கில்லை. அங்கு எங்களைப் படிப்பித்துக் கொண்டிருந்த பவளக்கொடி ரீச்சரின் மாஸ்ரர். அதாவது அவளை கலியாணம் முடிக்கப் போகும் காதலனென்று சொல் வதா? அல்லது பவளக்கொடி ரீச்சரின் வருங்காலக் கணவ னென்று சொல்வதா? எது எப் படி இருந்த போதிலும் 'இவர் தான் அவவை முடிக்கப்போருர்' என்பதுதான் என்கேள்விகளிலும் அப்போது விழுந்திருந்தது.

அதற்குமேல் அதைப்பற்றி அப் போது எனக்கொன்றும் தெரிந் திருக்கவில்லை. தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அக்கறையும் இருந்ததில்லை.

பவளக்கொடி ரீச்சர் பள்ளிக் கூடத்திற்கு வராத சில வேளை களில் முருகேசு வந்து அவள் வகுப்பு பாடங்களை நடத்துவார். அதற்கு ஹெற்மாஸ்ரர் யோக நாதனின் பெர்மிஷன் இருந்து தானே ஆக வேண்டும்.

''இல்லைத் தம்பி, நான் இப் போது ஒன்றும் செய்யவில்லை.'' என்ருர் முருகேசு வெகு நேரம் கழித்து.

''வட்யூ சே?... ஏன்?...''

''ஹம்......''


அடுத்த இதழில்...

# 'கற்பகம்' அறிவுப் போட்டி

ஆரம்பமாகிறது!

பாடசாலை மாணவ, மாணவிகளுக்குப் பயன் தரும் இவ் அறிவுப் போட்டியில் எவரும் பங்கு பற்றலாம். பெறுமதி மிக்க பரிசுகளும் உங்களுக் குக் கிடைக்கும்.

ஆச்சரியத்துடன் கலந்து வந்த எனது அவசரக் கேள்விக்கு மிஸ்றர் முருகேசு உடனடியாகப் பதிலளியாது நீண்ட பெருமூச் சொன்றை வெளியேற்றினர். விஷயம் என்னென்று அறிவதில் எனது மனதில் வெகுவாக ஆவல் மேலோங்கி இருந்ததெனினும், இப்போது அவர் இருந்த கோலமும் மன நிலையும் என் நெஞ்சைத் தொட்டுத் துன்புறுத்தியது. புருஷனையோ, பிள்ளையையோ சாகக் கொடுத்த கிராமத்துப் பெண்ணொருத்தியின் வியாகுலம் நிறைந்த சாயலில் கன்னத்தில் கைபதித்து ஏங்கிப் போய் ஜன்னலுக்கு வெளியே வெறித்துப் பார்த்தவாறு இருந்தார் முருகேசு.

ஒன்று மாத்திரம் என் நெஞ்சில் நிச்சயமாயிற்று.

பெருமூச்சின் பின்னணியிலே புதைபட்டுப் போய் கிடப்பது சாமானியமான கதையல்ல என்பது தான் அது.

அது எனக்கும் ஓரளவு முன்பே தெரிந்தது தான். ஆனலும் அதன் முடிவு எனக்கு இன்றளவும் தெரியாத வொன்று.

முருகேசு பெருமூச்சு விட்டுத் தொடக்கப்போகும் அவரது சோகம் நிறைந்த ஆரம்பக்கதைக்கும் எனக்கும்கூட ஓரளவு உடன்பாடுண்டு என்றுதான் சொல்ல வேண்டும்.

அதற்கு, அன்று எனக்கு பள்ளிக்கூடத்தில் மிஸ்றர் முருகேசு அளித்த அந்தக் கொடிய தண்டனைக்குரிய காரணத்தை மையமாக வைத்து விளங்கப்படுத்தினலே கதையை மிக இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

கதையின் முடிவை மிஸ்றர் முருகேசு சொல்லட்டும்! சொல்லத்தான் போகின்றர் என்பதற்கு அறிகுறியாகத்தானே அவரது பெருமூச்சு பூர்வ பீடிகையாக அமைந்திருக்கின்றது.

அதனல், எனது அவசரக் கேள்விக்குரிய பதிலை அவரிடத்தி

---

## கண்டுபிடிப்பு

ஆசிரியர்:- விஞ்ஞானத்தின் உச்சக் கட்டமாக என்ன கண்டு பிடித்திருக்கிருர்கள்?

மாணவன்:- மனித உயிர்களை வதைக்காமல் சாக்காட்டும் குண்டுதான் விஞ்ஞானத்தின் உச்சக்கட்டமான கண்டு பிடிப்பு சார்.

ஆசிரியர்:- ! ! ! !

## வேங்கைப்புலி

ஆசிரியர்:- வேங்கைப்புலி எங்கெங்கே இருக்கிறது? சொல்லுங்கள் பார்க்கலாம்.

மாணவன்:- இந்தியாவில் என்று தானே அடிக்கடி றேடியோவில் சொல்லுருங்கள் சேர்

ஆசிரியர்:- ? ? ?

- என். மகேந்திரராஜன்

---

லிருந்து உடனடியாக அறிந்து விட வேண்டுமென்ற ஆவலைக் கூட அடக்கியவனுக அவரை அவர்போக்கிலேயேஇருக்கவிட்டு, எனது ஆரம்பப்பள்ளிக்கூடமாகிய அந்த அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் போய் நிற்கின்றேன் நான்.

ஆனாலும் மிஸ்ரர் முருகேசுவும் நானும் சிந்திக்கத் தொடங்கும் களம் ஒன்றே ஒன்றுதான் என்பதும் உண்மையே. அது எங்கள் அமெரிக்கன் மிஷன் பாடசாலையே தான். நான் அந்த நாளைய ஆரம்பக் கதையை மாத்திரம் அசை போடுகின்றேன். அவர் ஆரம்பத்தையும் முடிவையும் கூட எனக்குச் சொல்வதற்கிடையில் ஒரு தரம் நினைவு கூர்ந்து ஞாபகப் படுத்திப் பார்ப்பவராகவே தெரிகிறது.

அந்த அமெரிக்கன் மிஷன் பாடசாலைதான் எனது ஆரம்பக் கல்விக்கு வித்திட்ட பள்ளிக்கூடமாகும். அதை நினைக்கும்போது எனது பாலிய காலத்து நினைவுகளெல்லாம் எவ்வளவு பசுமையாய்- இனிமையாய் என் நெஞ்சில் ஓடிவந்து ஒன்றன்பின் ஒன்ருக மொய்த்துக் கொள்கின்றன. அடடா, அந்தநாட்களை நினைக்கும்போது என்னை அறியாமலே என் கண்களில் ஈரம் கூடக் கசிகின்றதே!

ஆம்! அந்தப் பாலிய காலத்து நாட்களின் வாழ்க்கை அவ்வளவு ஈரமுடைய வாழ்க்கை தான். என் தேகத்தை உரமிட்டு வளர்த்து பனையாக்கி விட்ட பனம் பண்டங்களின் விதவிதமான உருசிகளை நினைக்கும்போது இப்போதும் நாக்கில் சுரந்து வாய் கொள்ளாமல் வந்துவிட்ட உமிழ் நீரை 'மடக்' என்று முடறு முறித்து என் எதிரே இருக்கும் முருகேசு கூட அறியாதவாறு விழுங்கி விட்டேன்.

இப்போது பனம் பழத்தையும், ஒடியல் பிட்டையும், ஒடியல் கூழையும் சுவைத்து எத்தனை காலமாயிற்று! தேனும் தினைமாவையும் எமது முருகக் கடவுள் மாத்திரம்தான் சுவைத்தாரா! செவ்வாச்சித் திருநாட்களில் தினைமாவும், பனம் பாணியும் பிசைந்து பிடித்தவித்த கொழுக்கட்டையைச் சுவைத்தாலே தேனும் தினைமாவின் உருசியும் தானே தென்படும். கமகமக்கும் குரக்கன் பிட்டும், கொழுக்கட்டையும் தின்றுதான் எவ்வளவு காலங்களாயிற்று? இவைகளைக் கண்டே கனகாலங்களாயிற்றே. காண்பதற்குத்தான் எங்கே இருக்கின்றன?

(தொடரும்)

# சங்கச் செய்திகள்

அங்கத்தவர்களுக்கு

## சேமிப்புத் தொகையிலிருந்து ஐந்தரை லட்சம்!

சாவகச்சேரி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் அங்கத்தவர்களுக்கு ஐந்தரை லட்சம் ரூபாவைச் சேமிப்புத் தொகையிலிருந்து ஒரு பகுதியாகத் திருப்பி வழங்குகின்றது. இது வரையில் சங்கங்கள் அங்கத்தவர்களுக்கு வழங்கிய தொகையில் இதுவே மிகக் கூடுதலான தொகையாகும். சங்கம் தொடர்ந்தும் அங்கத்தவர்களது சேமிப்புத் திட்டத்தை அமுல் செய்வதெனவும் பொதுச் சபை தீர்மானித்துள்ளது.

அடுத்த ஆண்டு

## இளைப்பாற்று நிதித்திட்டம்!

வட மாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சமாஜம் சகல சங்கங்களுக்கும் பொருத்தமானதாயும், ஒரே விதமாகச் செயற்படுத்தத்தக்கதாயும் அடுத்தஆண்டு முதல் அங்கத்தவர்களுக்கான இளைப்பாற்று நிதித்திட்டமொன்றை நடை

-21-ம் பக்கம் பார்க்க

கிராமிய அபிவிருத்திப் பணிகளில்

## அரியாலை சங்கத்தின் முன்மாதிரி

அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் சமூக முன்னேற்றம், கிராமிய அபிவிருத்திப் பணிகளில் அதிக கவனம் செலுத்தி வருவதோடு எல்லோரதும் "சபாஷ்" களையும் பெற்றுக் கொண்டுள்ளது. அரியாலை நாவலடி விஷ்ணு சிறுவர் பாடசாலையில் கடமையாற்றும் இரு ஆசிரியைகளுக்கான ஒரு வருடச் சம்பளத்தை இச்சங்கம் வழங்க முன் வந்துள்ளது. சங்க அங்கத்தவர்கள், பணியளர்களின் வேதனத்திலிருந்து இதற்கான நிதி திரட்டப்படுமென்று

-21-ம் பக்கம் பார்க்க

## பனஞ் சாராயம் உற்பத்தி

யாழ். மாவட்ட கூட்டுறவு பனஞ்சாராய வடிசாலைச் சமாஜம் அடுத்த

-21-ம் பக்கம் பார்க்க

# புதிய திட்டங்கள்!

## சமாஜக் கருத்தரங்கில் தகவல்

வட பகுதியில் கணிசமான அளவு தொகையான மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு மூலகாரணியாக விளங்கும் தெங்குபனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களான சீவல் தொழிலாளர்களுக்கு மேலும் நன்மை அளிக்கக் கூடிய வகையில் விபத்து நலத் திட்டம், ஓய்வூ

-21-ம் பக்கம் பார்க்க

## முல்லைத்தீவு மாவட்டத்திலும் கூட்டுறவு முறை

பாண்டியன் குளம்- துணுக்காய் தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கம் பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் மல்லாவியில் 'கற்பகம்' விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. முல்லைத் தீவு மாவட்டத்தில் இயங்கி வரும் இச்சங்கம் வட மாகாண தெங்குபனம் பொருள் கூட்டுறவுச்சங்க சமாஜத்தின் அங்கத்துவ எண்ணிக்கை இருபத்தொன்றாக உயரவுள்ளது.

### அரியாலை...

19ம் பக்கத்தொடர்

சங்கத் தலைவர் திரு. த. சிவலிங்கம் கற்பகத்துக்கு தெரிவித்தார்.

கச்சேரி நல்லூர் வீதியில் மகளிர் பேரவையினால் நிர்வகிக்கப்பட்டு வரும் அகதிகள் முகாமிற்கு அரிசி, மா ஆகிய உணவுப் பொருட்களையும் இச்

-23-ம் பக்கம் பார்க்க

### ஊர்காவற்றுறை சங்கத்திற்கு சபாஷ்!

பனங்கள் உற்பத்தியிலும், இதன் மூலம் அங்கத்தவர்களது வருமான அதிகரிப்பிலும் முன்னணி வகிக்கின்ற ஊர்காவற்றுறை தெ.ப.பொ.கூ. சங்கம் இதுவரை

*நினைவு அஞ்சலி*

## அமரர் தருமகுலசிங்கம்

"தன்னைத் திருந்திக் கொள் சமூகம் தானாகத் திருந்தும்" என்ற முதுமொழிக்கிணங்க வாழ்ந்து காட்டிய யாழ். மாநகர தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அமரர் இ. தருமகுலசிங்கத்தின் மறைவு கூட்டுறவு அமைப்பிற்கும், தொழிலாளர் சமூகத்திற்கும் பேரிழப்பாகும். 36வயது இளைஞரான இவர் வயதில் குறைந்தவராக இருந்தபோதிலும் ஒரு சங்கத்தின் தலைவராகப் பதவி வகித்து ஆற்றிய பணிகள் அளப்பரியன. ஒரு மனிதன் மற்றவர்களினால் மதிக்கப்பட வேண்டுமானால் அதற்குக் கல்வியறிவு குடும்பபின்னணி தான் முக்கியமல்ல. வாழ்வாங்கு வாழ்வதின் மூலம் எவனும் சமூகத்தில் மறக்கமுடியாத ஒருவனாகத் திகழலாம் என்பதற்கு எடுத்துக் காட்டாக அகால மரணமெய்திய அமரர் இ. தருமகுலசிங்கம் (பிள்ளையார்) விளங்கினார்.

-28-ம் பக்கம் பார்க்க

'லோவைன்' உற்பத்தியிலும் கணிசமான தொகையைச் சம்பாதித்துள்ளது.

## இளைஞர் அமைப்புகளும் சங்கங்களும்

கடந்த சில காலமாக நஷ்டத்தில் இயங்கி வந்த சில தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இளைஞர் அமைப்புக்களின் பல்வேறு ஒத்துழைப்புடன் தற்பொழுது இலாபகரமாக இயங்கத் தொடங்கியுள்ளன.

---

## பனஞ் ...

-19ம்பக்கத் தொடர்

ஆண்டு பனஞ்சாராய உற்பத்தி வேலைகளை முழுமையாகத் தொடங்கவுள்ளது. இதன் மூலம் கள் வீணாகும் அகற்றும் பிரச்சினை தவிர்க்கப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது.

---

## இளைப் ...

19ம் பக்கத் தொடர்

முறைப்படுத்த உள்ளது.

சமாஜத்தினுல் ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் விபத்து நலத்திட்டத் திற்கான உதவித் தொகைகளும் அடுத்த ஆண்டு முதல் அதிகரிக்கத்தக்க வகையில் நடைமுறை விதிகள் திருத்தம்செய்யப் படவுள்ளது.

## புதிய ...

20ம் பக்கத் தொடர்

தியத் திட்டம், கட்டாய சேமிப்பு திட்டம் ஆகியன மறுசீரமைக்கப்படவுள்ளன. 1986 ம் ஆண்டிலிருந்து இப்புதிய திட்டங்களைச் சங்கங்களின் நிதியிலிருந்தே நடைமுறைப்படுத்துவதற்கும் வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் திட்டமிட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற வடமாகாண தெ. ப. பொ. கூ. சங்கங்களின் சமாஜத்தின் கருத்தரங்கில் இது சம்பந்தமாக ஆராயப் பட்டதுடன், பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களையும் அவ்வப்பகுதி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயற்படுத்துவதற்கான ஆலோசனைகளும் வழங்கப் பட்டன.

இலங்கை பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவரும் சமாஜச் செயலாளருமான திரு. க. நடராசா இத்திட்டங்களைச் சமர்ப்பித்து உரையாற்றினுர். தற்போதைய இச் சூழ்நிலையில் இக்கூட்டுறவுச் சங்கங்களை வெற்றிகரமாக இயக்குவது பற்றி நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது. சமாஜத் தலைவர் திரு. த. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் சகல சங்கங்களின் தலைவர்களும், முகாமையாளர்கள், செயலாளர்களும் கலந்து கொண்டனர். இளைஞர் அமைப்புக்கள் இச்சங்கங்களுக்கு முக்கியத்துவமளித்து உதவி வருவதற்கும் கருத்தரங்கில் நன்றி தெரிவிக்கப்பட்டது.

## அரியாலை....

20ம் பக்கத் தொடர்

சங்கம் நிவாரண உதவியாக வழங்கியுள்ளது.

அரியாலை ஸ்ரீபார்வதி பாடசாலையின் நீண்டகாலக் குறையைப்போக்கும் முகமாகச் சங்கம் ஐயாயிரம் ரூபா செலவில் 50 அடி நீளமுள்ள சுற்றுச் சுவரைக் கட்டிக் கொடுத்துள்ளது.

அரியாலை கனகரத்தினம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டியின் போது பரிசுப் பொருட்களாக இவ் வருடம் 1500 ரூபா பணமாக வழங்கப் பட்டுள்ளது. முன்னர் வருடாவருடம் சங்கம் பரிசுப் பொருட்களை வழங்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

# சிரச்சிங்காசனத்தில் பிறந்த ஈட்டி எழுபது

நாட்டுக்காகத் தம்தலைகளை ஈந்த தியாகரத்தினங்கள் வாழ்ந்த நம் தமிழ் நாட்டிலே தம் குலப் பெருமையை விளங்க வைக்கும் கவிதைகளுக்காகத் தம் தலைகளை ஈந்த தியாகிகளும் வாழ்ந்து தான் இருக்கிறார்கள். அந்தத் தியாகத்திறனை எடுத்துக் காட்டும் நோக்கமாக எழுந்த ஒரு பயங்கரமான பாடல் தான் ஒட்டக் கூத்தரின் ஈட்டி எழுபது. ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு தலைவீதம் அதுவும் தாய்க்குத் தலை மகனின் தலைகளாக அந்தோ! எழுபது பாட்டுக்கும் எழுபது தலைகள் என்று கேட்டாரே அந்த ஒட்டக் கூத்தர். இரக்கமின்றித் தம் மனதைப் பாறுங்கல்லாக்கித் தம் குலத்தின் புகழ் விளங்க அவர் எழுபது தலைகள் கேட்ட போது எழுபதுக்கும் மேற்பட்ட தலைகளை அரிந்து கொடுத்த மக்களின் தியாக சிந்தையை ஒட்டக் கூத்தரின் ஈட்டி எழுபது காட்டி நிற்கிறது.

**எழுபது தலைகள் வாங்கிய ஒட்டக்கூத்தர்**

ஆடை நெய்தலைத் தம் குலத் தொழிலாகக் கொண்ட கைக்கோளர்கள் என்றழைக்கப்படும் செங்குந்தர்கள் ஒரு நாள் தங்கள் மரபில் பிரபல வித்துவானாகியிருக்கிற ஒட்டக் கூத்தரிடம் சென்று "ஐயா! கவிச்சக்கரவர்த்தி கம்பரோ வேளாளரைக் குறித்து ஏரெழுபதும் வன்னியரைக் குறித்துச் சிலையெழுபதும் பாடியுள்ளார். வைசியரின் பெருமை பாடச் சிலப்பதிகாரம் எழுந்துள்ளது. பந்தன் என்ற வணிகன் ஒருவன் மேல் ஔவையார் ஒரு அந்தாதியும், ஐவேல் அசதி யென்ற யாதவன் மேல் ஒரு கோவையும் பாடியிருக்கிறாரே. கம்பர் தமது கம்பராமாயணத்தில் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப முதலியாரை ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார். இப்படியாக வைசியர், வேளாளர், வன்னியர், யாதவர் முதலானவர்கள் தத்தம் குலவளத்தைப் புகழ்ந்துரைக்கப் பாடல் பெற்றுச் சிறப்படைந்துள்ளனர்.

**திக்கம் சிவயோகமலர் ஜெயக்குமார்**

ஆனால் ஆடைநெய்து மற்றவர்கள் மானம் காக்கும் நமது குலத்தவர் மட்டும் பாடல் பெற்றுச் சிறப்படைய புண்ணியம்

செய்யவில்லையா? நமது மரபின் புகழ் விளங்கத் தாங்களாவது ஒரு பிரபந்தம் ஆக்கக் கூடாதா? என்று மிகுந்த கவலையுடன் கேட்டனர்.

"நீங்கள் விரும்பும் விடயம் வரவேற்கத்தக்க" தென்று அமைதியாக எடுத்துரைத்த ஒட்டக் கூத்தர் பாமாலை சூட்டப் பெற்றவர்கள் சாமானியமானவர்கள் அல்லவே. பூதவுடம்பு அழிந்தாலும் புகழுடம்பு அழியாத இறந்தும் இறக்காதவர்கள் மட்டுமே பாமாலை சூட்டப்பெறும் பாக்கியசாலிகள். நம்மைக் குறித்து நாம் பாடுவதைக் காட்டிலும் பிறர் ப்ாடுவதே தகுதி. நம்மைக் குறித்து நாம் பாடினுல் நாமே நம்மைப் புகழ்வதாக மற்றவர்கள் கணிப்பார்களே. வேளாளர் முதலானோர் கம்பர் போன்றோரால் பாடல் பெற்றதைக் கண்டு செங்குந்தர்களும் தம்மைத்தாமே பாடிக் கொண்டார்கள் என்றல்லவா சொல்வார்கள்? கானமயில் ஆடியதைக் கண்டு வான்கோழியும் ஆடியதாகப் பேசிக்கொள்வார்களே."

'பண்ணிதர்களுக்கும், அரசருக்கும், கொடையாளருக்கும், வீரர்களுக்கும் மெய்ஞ்ஞானிகளுக்கும் சாதிபேதம் கிடையாது. ஐயா! 'தன்னைப்புகழ்தலும் தகும்புலவோற்கே' என்று சொல்லப்படுவதால் எமது இனத்தவரை நீர் பாடுவதில் பிழையில்லையே" என்று செங்குந்தர்கள் கூறிய பொழுது ஒட்டக்கூத்தர் "சரி உங்களை நான் பாடத்தயார். நீங்களும் பரிசு தரத்தயாராக வேண்டும்' என்றார்

"ஐயனே! உமக்கு வேண்டும் திரவியம் அள்ளித் தருகிறோம். எங்களைக் குறித்துப் பாடினுல் போதுமானது" என்று மிக மிக மகிழ்ச்சியுடன் கூறியபோது, "எனக்குச் சோழராசன் குறைவின்றிக் கொடுத்தமையால் அந்தப் பாக்கியம் நிறைவாய் இருக்கிறது. நீங்கள் கொடுக்கவேண்டியது அதுவல்ல" என்றார் மனதில் எதையோ மறைத்து வைத்துக்கொண்ட ஒட்டக்கூத்தர்.

சிறிது நேரம் யோசித்த செங்குந்தர்கள் "சரி ஐயா; நீங்கள் எதை வேண்டுமென்று கேட்கிறீர்களோ அதை நாமும் தரத்தயங்கோம்" என்றனர். ஒட்டக்கூத்தரோ "நான் கேட்பதை நீங்கள் தடையின்றித் தந்தீர்களானுல் நானும் தயங்காமல் பாடுவேன்.' என்றவர் தமது ஈட்டியைச் சுட்டி எழுபது பாடல்களை நான் பாடும் பொழுது எனது ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொன்ருக எழுபது தலைச்சன் பிள்ளைகளின் தலைகளை அரிந்து பரிசு தரவேண்டும்" என்று நாக்கூசாது சொன்னர்.

"இதென்ன கோரம். கூத்துப் பார்க்கப்போன இடத்தில் பேய் பிடித்தது போல இருக்கிறதே" என்றவர்கள் அக்கூற்றைக் கேட்க முடியாமையால் தம் இரு செவிகளையும் கைகளாற் பொத்தினர்.

“இவரையா நம்மவர் என்று நாம் வந்தோம்? கொஞ்சமாவது இரக்க மற்றவராயிருக்கிறரே. இது என்ன விபரீதம்? பாட்டுப் பாடத் தலை யும் கேட்பார்களா? பாடமனமிருந்தால் இப்படிக் கேட்பாரா? என்று மனமேங்கிச் செய்வதறியாது அசைவற்ற மரம்போல் நின் றனர்.

“நாம் கேட்டதற்குப் பதில் இல்லையே ஏன்?” என்று கேட்ட ஒட் டக்கூத்தரை வெறுப்புடன் நோக்கிய செங்குந்தர்கள் ஆத்திரம் பிரதி பலிக்க மனவருத்தத்துடன் “ஐயரே! செல்வம் செல்வத்துக்கஞ்சுவது கிடையாது. உமக்கு நாக்கூசவில்லை, ஆனுல் எமக்கோநாவெழவில்லை. பதில் சொல்ல அஞ்சுகிறேம். நம்மரபின் மகிமை விளங்கும்படி பாடல் பாடவேண்டும் என்று கேட்டால் நீரோ நாக்கூசாது தலை கேட்கிறீர். கேவலம் பாட்டுக்காகத் தலை கொடுத்தோர் யார்? ஐயரே! நீரோ கல் நெஞ்சம் படைத்தவர்” என்று அழாக் குறையா கக் கூறினர்கள்.

ஒட்டக்கூத்தர் கேலியாகச் சிரித்தார். “நம்மவர்களே கேளுங் கள், யான் மேலேறுவேன். வீரமணி கட்டுவேன். அகப்பட்ட பெயர் களின் தலையை உடைப்பேன் என்று சிறு பிள்ளைகள்கூடத் தைரிய மாய்ச் சொல்லும்போது அந்தத்தைரியம்கூட உங்களிடம் இல்லையே ஏன்? என்னை யாரும் தூக்கிப்பிடித்தால் பிணக்காடாய் வெட்டு வேன் என்ற முடவனுக்குள்ள தைரியம் உங்களுக்கு எங்கே போய்விட் டது?

குமணமகாராஜன் காட்டில் இருந்தபோது அவர் மீது வித்து வான் ஒருவர் கவிபாடிக்கொண்டு சென்று பரிசுகேட்டபோது அவரி டம் கொடுப்பதற்கு எதுவும் இல்லாமையால் அமணராஜனுகிய தனது தம்பி தனது தலையைக் கொய்துகொண்டு வருவோர்க்குப் பணம் கொடுப்பான் என்று கூறி உடைவாளை உருவி வித்துவானிடம் கொடுக்கவில்லையா?

பழையனூரில்ஒருவணிகனுக்காக வேளாளர் எழுபதுபேர் தங்கள் உயிரைக் கொடுத்துச் சத்தியத்தை நிலை நிறுத்தவில்லையா? ஒரு ஏரி அணை உடைத்துப் பாய்வதைக் கண்ட கமக்காரன் ஒருவன் அதை மண்போட்டு மூட முடியாமையையும், சிறிது நேரம் சென்றுல் நாடே சேதமாகும் என்பதையும் அறிந்து மற்றொரு கமக்காரனைக்கொண்டு தன்னையே வெட்டி அணையை அடைக்கவில்லையா?

வீரனுக்குப் பிராணன் பெரிதா? தலை கொடுப்பதோர் அதிச யமா? நம் முன்னேர் உயிரை ஒரு பொருட்டாக மதிக்கவில்லையே, உங்களுக்கோ உயிர்தானே பெரிது. எனவே பாடல்பாட வேண்டு மென்ற ஆசையை விட்டு விடுங்கள். நாய்க்கு ஏன் போர்த்தேங்

காயை? முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுதல் தகாதல்லவா?'' என்று ஏளனம் கலந்த தொனியில் கூறினர்.

''தங்கள் குலத்துக்குக் கீர்த்தியைத் தேடித் தருபவர்களேயே உத்தமர்கள்'' என்று யோசித்த செங்குந்தர்கள் இளநீர்க்காய் உதிர்ப்பது போலத் தங்கள் தலைகளைத் தாங்களே அரிந்தெறிந்தனர். முண்டங்களோ ஆங்காங்கே விழுந்தன.

பாட்டுக்கொரு தலையாக எழுபது தலை கேட்டாரே ஒட்டக்கூத்தர் அவரே வியக்கும்படி அவர் கேட்ட எழுபதுக்கும் அதிகமான தலைகள் கூடைகூடையாக வந்து அவர் முன் குவிந்தன. ''இவைகளைச் சோழமகாராசாவின் வாசலண்டை கொண்டுபோய்க் குவியுங்கள். நாம் அங்கு வருகிறோம்'' என்றார் ஒட்டக்கூத்தர். தம்இனத்தவரின் தியாக சிந்தையை மனத்திலெண்ணி மனதுக்குள் பெருமைப்பட்டுக் கொண்டார் அவர்.

உறையூரிலே சோழ அரசனின் மண்டபத்துக்கெதிரே தலைகள் மலை போலக் குவிந்தன. தலைகள் வெட்டப்பட்ட கோரக்காட்சியைக் காணப்பெறாத சோழ வேந்தனே ''இதென்ன அநியாயம்?'' என்று கேட்டபோது செங்குந்தர்கள் தாம் பாடல் பாடச்சொல்லிக் கேட்டதும் அவர்பரிசாகத் தலை கேட்டதும் தம்மவர்கள் கொடுத்ததுமாகிய எல்லாச் செய்திகளையும் வரிசையாகக் கூறினர்கள்.

அதே நேரம் ஒட்டக்கூத்தரும் அவ்விடம் வந்தபோது சோழ அரசன் அவரைப் பார்த்து ''ஐயனே! கூத்தரே! இதென்ன கூத்து?'' என்றபோது'' அவர்கள் பிரபந்தம் பாடச் சொன்னர்கள். நான் எழுபது பாட்டுக்கும் எழுபது தலை கேட்டேன். ஆனல் வற்புறுத்தவில்லையே, அவர்கள் சம்மதித்து அப்படியே செய்தார்கள். என்று கூறியபோது ''ஐயா! கூத்தரே! தலை கேட்டீரே. உமக்கு அதனல் லாபமுண்டோ?'' என்றார் அரசர்.

''நமக்கு லாபம் தேவையில்லையே காரியமானுற்சரி. காரியம் என்னவென்று சிறிது நேரத்தில் அறிவீர்கள். பிரபந்தமும் இனிமேற்றான் பாடவேண்டும்'' என்று கூறிவிட்டுத் தலைகள் சரிந்து விழாதபடி செவ்வையாய் அடுக்கி ஆசனம் போலாக்கி அச்சிரச்சிங்காசனத்தின் மேல் அவர் ஏறி உட்கார்ந்துகொண்டு இருகைகளையும் சிரசின்மேற் குவித்துச் சரஸ்வதியை வணங்கி அவளின் லாவண்ய ரூபத்தை மனதில் தியானித்துப்பலமுறை அவள் திருநாமங்களை நினைத்து அன்னையின் அனுக்கிரகத்தால் அதிசாதுரியமாகவும், அற்புதமாகவும், நவரச அலங்காரத்துடனே கேட்டவர்கள் எல்லாம் வியக்கும்படி செங்குந்தர்களையும் அவர்கள் ஆயுதத்தையும் சுட்டி ''ஈட்டி எழுபது'' என்ற பிரபந்தத்தைப் பாடி முடித்தார்.

பிரபந்தம் முடிவுறும்போது அவரது பாடல் 'கலைவாணி, தாயே! எனக்கோபாவமும் பழியும் நேராது இந்த உத்தமவீரர்களின் தலைகளும் முண்டங்களும் ஒன்றாகி உயிர் பெற்றெழுந்து என் 'ஈட்டியெழுபது' பிரபந்தத்தையும் கேட்கவேண்டும்'' என்று மாறுகின்றது.

''கலைவாணி நீயுலகில் இருப்பதுவும் கல்வியுணர் கவிவல்லோடை
நிலையாகப் புரப்பதுவும் மலர் நாவில் வாழ்வதுவும்நிசமேயன்றோ
சிலைவாணனு விருந்தாயிரம் புயங்கள் துணிந்துமுயர்சீவனுற்றுன்
தலையாவி கொடுத்திடும் செங்குந்தர் உயிர்பெற்றிடத்தயை
செய்வாயே''

பாடல் முடிவுறுகின்றது. காந்தமும் இரும்பும்போல ஒவ்வொரு தலையும் அதனதன் முண்டத்துடன் ஒட்டிக்கொண்டன.

அதன்பின் செங்குந்தரின் உபகாரங்கள் உதாரண குணங்களை வெளியிட விரும்பிய ஒட்டக்கூத்தர் 'தந்துவாயர்' என்று உபத்திரத்தால் நிலைகுலைந்த காலத்தில் அவனை உபாயத்தால் வென்று உலகத்தை நிலைபெறச் செய்தார்கள். விஷ்ணுகூடத் திரௌபதி ஒருத்திக்கே ஆடைகொடுத்து மானங் காத்தார் ஆனுல் சகலதேசங்களிலுமுள்ள குழந்தை முதல் பெரியவர்கள் வரை ஆடை கொடுத்து மானங்காப்பவர்கள் இந்தச் செங்குந்தர்கள். தாம் நெய்யும் புடவைகளை வணிகரிடம் கொடுத்து இவற்றை விற்றுப் பிழையுங்கள் என்று அவர்களுக்கு வாழும் வழி காண்பித்தவர்கள். சகல திசைகளிலுமுள்ள புலவர்களின் தமிழ்ப்பாமாலைகளுக்குப் பொன்னை வாரிவழங்கியவர்கள். நான் பாடிய இவ்வீட்டி எழுபது பிரபந்தத்துக்காகத் தம் தலைகளையே கொடுத்தவர்கள். அதிக நாளாகச் சிறப்பின்றிக் கூத்தனென வழங்கிய பெயரைச் சிறப்பித்து ஒட்டக்கூத்தனென்றாக்கிய பெருமையுடையவர்கள் என்ற பொருள்விளங்கும் வண்ணம் அமைத்து அழகான பாடலாகப் பாடினுர்.

''நிலைதந்தார் புவியினுக்கே யாவருக்கும் அபிமானம் நிலைக்கத்
தந்தார்
கலைதந்தார் வணிகருக்குச்சீவனம்செய்திட வென்றே கையில் தந்தார்
விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்தரென் கவிக்குவிலையாகத்தான்
தலைதந்தார் எனக்கொட்டக் கூத்தரெனும் பெயரினையும் தாம்
தந்தாரே''

''தலைகளால் என்ன பிரயோசனம்?'' என மன்னன் கேட்டபோது சிறிது நேரத்தில் தெரியுமென ஒட்டக் கூத்தர் சொன்னது ஏன் என்று மன்னனுக்கு விளங்கியது. நமக்கு ஒட்டக்கூத்தரென்ற பெயரும் நமது குலத்தாருக்குச் சிரச் சிங்காசனுதிபதிகள் என்ற பட்டமும் கிடைக்க வேண்டும் என்ற அவாவுமே என்று நிச்சயித்த மன்னன் கூத்தரை ஒட்டக்கூத்தரென்றும் செங்குந்தரைச் சிரச் சிங்காசனுதிபதிகள் என்றும் பட்டம் கொடுத்துப் பலவகை விருதுகளும் வழங்கி மரியாதை செய்தான்.

# விசாரணை

○ எஸ். எஸ். காசிப்பிள்ளை ○

கொழும்பில் நடந்த ஆடிக் கலவரத்துடன் அங்குள்ள பல்கலைக் கழகத்தில் படித்த மகனை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மாற்றுவித்தது பெரியதொரு சாதனையென்று எண்ணி இறுமாப்புக் கொண்டிருந்த மாணிக்கத்தாருக்குத் திடீரென மனம் சோர்ந்தது.

யாழ்ப்பாணத்திலும் நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக் கொண்டே வந்தது. எங்கு பார்த்தாலும்... தீவைப்புச் சம்பவங்கள் குண்டுவெடிப்புச்சம்பவங்கள்... துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்...

இதையெல்லாம் கண்டும் கேட்டும் மலைத்துப்போனார் மாணிக்கத்தார். பிறந்த மண்ணிலே சொந்த வீட்டிலேயே இருக்க முடியாமல் தவிப்போரும், பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பாது தடுப்போரும், உயிர்களை, உடைமைகளை இழந்து பரிதவிப்போருமாய் சனங்கள் தடுமாறும் போது தன் ஒரே மகனை எப்படிப் பல்கலைக்கழகம் அனுப்புவது? மாணிக்கத்தாரின் மூளை தீவிரமாகச் சிந்தித்தது.

''இன்றைய நாட்டின் நிலையில் நீ படிக்கப்போவதை நான் விரும்பவில்லை. சின்ன மீனைப் பெரிய மீன் பிடித்துத் தின்பது போல ஒரு இனம் இன்னொரு இனத்தை முடித்துக் கட்டுது. நாங்கள் இனியும் இங்கே இருந்தால் சாக வேண்டியதுதான். அதற்கிடையில் எங்கேயாவது ஓடித்தப்புவதுதான் நல்லது.'' மகனைக் கூப்பிட்டு முடிவைச் சொன்னார். அவரது தீவிர சிந்தனையின் முடிவு இது தான் போலும்.

மகன் ஏளனச்சிரிப்புடன் ''எங்கை ஓடப்போறியள்?' என்று கேட்ட போது வீதியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள்' இடைவிடாது கேட்டன. தொடர்ந்து வாகனங்கள் தறிகெட்டோடும் சத்தமும், அவலக் குரல்களும் கேட்டன. மாணிக்கத்தாருக்கு ஏக்கம் பிடித்து விட்டது. நட்ட மரம்போல அசையாது நின்றார்.

''இரவைக்கு வீட்டிலை படுக்க ஏலாது. எங்கையாவது காட்டுக்குத்தான் போக வேணும்''

''காட்டில எத்தனை நாளுக்குத் தான் இருக்கப் போறியள்?'' மகன் மீண்டும் ஏளனச் சிரிப்புடன் சொன்னான்.

''இந்த உலகத்திலே உள்ள ஒவ்வொருவரும் தாம் தாம் செய்த பாவ புண்ணியங்களை அனுபவித்தே தீரவேண்டும். இரண்டு வருஷத்திற்கு முந்தி எங்கடை ஊரிலே நடந்த சாதிச் சண்டையிலே நீங்கள் செய்த அநியாயங்கள் எத்தனை?

ஒழித்தோடிய குட்டியனின் மோன் குணத்தானைத் தேடிப் பிடித்துத் தலையில்லாப்பிணம் ஆக்கியது உங்களின் கையாட்கள் தானே. படுத்திருந்த பரமனுக்கு அடித்ததோடு அவனது ஆடு மாடுகளை உயிர்ப்பலி எடுத்ததும் உங்கள் ஏவலாட்கள்தான். அப்ப எல்லாம் நான் எவ்வளவு சொன்னனான். கேட்டியளோ?

'சீ உந்த எளிய சாதியளைத் தலை தூக்க விடக்கூடாது.' என்று துள்ளிக்குதித்தீர்கள். சங்கானையில் சாதிக்கலவரம் என்றால் அங்கே போனீர்கள். எழுதுமட்டுவாளில் என்றால் அங்கே சென்றீர்கள் அச்சுவேலியில் உங்கள் ஏவலாட்களை அனுப்பினீர்கள். அன்றெல்லாம் உயிர்ப்பலி நடக்கவில்லையோ? உடமைகள் சூறையாடப்படவில்லையா?

இன்று நீங்கள் கஷ்டப்படும் போது மட்டும் காட்டுக்குப் போக வேண்டுமா? இன்றைய இளைஞர்கள் களவெடுப்போருக்கு கற்பழிப்போருக்கெல்லாம் தண்டனைவழங்கிக் கொண்டுவருகிறார்கள். அடுத்தது சாதிப் பாகுபாடுகளை வளர்க்கும் உங்களைப் போன்றோருக்குத்தான் தண்டனைகிடைக்கப்போகுது.''

மலைத்துப் போய் நின்ற மாணிக்கத்தாரின் மனம் மகன் சொன்னது சரிதான் என ஏற்றுக் கொண்ட போது நாலைந்து வாலிபர்கள் தெருப்படலையைத் திறந்து கொண்டு வீட்டு முற்றத்துக்கு வந்தனர்.

''நீங்கள் தானோ மாணிக்கத்தார்?'' வந்தவர்களில் வாட்டசாட்டமான ஒரு இளைஞன் கேட்டான். ''ஓம் தம்பி'' என்று சொல்லி வாய் மூடுவதற்குள்...

''...நம்மினத்தின் ஒரு பகுதியினரை மிருகத்தனமாக நடத்தி பல அநியாயங்கள் செய்திருக்கின்றீர். இது பற்றி உம்மை விசாரிக்க வேணும்... எங்களோடு வாரும்'

அப்போது சற்று நேரத்திற்கு முன்பு அவரது மகன் சொன்னது

---

## நினைவு....

— 20-ம் பக்கத் தொடர்

சங்கம் எதிர்கொண்ட சோதனைகள், எதிர்ப்புக்களைச் சர்வசாதாரணமாகத் தனது ஆற்றலால் முறியடித்து அதனை ஒளிமிக்கதோர் பாதையில் கொண்டு செலுத்திய அமரர், சங்கஇயக்குனர்கள், ஊழியர்கள் மத்தியில் நீங்கா இடம் பெற்றிருந்தார். அவரது மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

—வே. அப்பையா (யாழ் மாநகர தெ. ப. பொ. கூ. ச.)

நினைவுக்கு வந்து நெஞ்சை ஏதோ செய்தது.

"சாதியின் பெயரால் நீங்கள் மகன் சொன்ன வார்த்தைகள் நெஞ்சில் ஈயக்குண்டாகஇறங்க கொலைக்களத்து நினைவுடன்,



செய்த சண்டித்தனங்களுக்காக வும் சங்காரங்களுக்காகவும் கட்டாயம் தண்டனை கிடைக்கும்.

அந்தஇளைஞரைப் பின் தொடர்ந்தார் மாணிக்கத்தார்.

(யாவும் கற்பனை)

# தமிழ்ப் பிரதேசங்களில் பனைவள உற்பத்திகளின் பொருளாதார முக்கியத்துவம்

ஆ. இரகுநாதன்
பீ - கொம் (சிறப்பு)

பண்டைக்கால பொருளாதாரத்தில் பனை வள உற்பத்திகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்து வந்துள்ளமையினை நாம் வரலாறுகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. அதிலும் சிறப்பாக ஆதிகால தமிழ் மக்களின் பொருளாதார வாழ்க்கையில் பனை வள உற்பத்திகள் மிகவும் முக்கியத்துவம் வகித்து வந்திருக்கின்றன. இதன் முக்கியத்துவத்தினை எடுத்துக்கூற முற்படும் இடத்து பனை வளங்களில் இருந்து எண்ணூறுக்கும் அதிகமான உற்பத்திகள் ஆக்கப்படலாம் என்ற ஒரு கூற்றே இதில் அடங்கி உள்ள பொருளாதார வாய்ப்புக்களை எடுத்துக் காட்டுவதற்கு போதுமானதாக உள்ளது.

பண்டைக்காலத் தமிழ் மக்களின் பொருளாதார வாழ்க்கையில் பனைவள உற்பத்திகளின் பங்கினை ஆராயுமிடத்து 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளிலேயே மரத் தேவைகளுக்காக பனையை பயன்படுத்தும்முறை வளர்ச்சி அடைந்ததுடன் பனை மரங்கள் ஏற்றுமதிக்காக உபயோகிக்கப் பட்டும் இருக்கின்றன. இதன் விளைவாக யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பகுதிகளில் அதிகளவு பனைகள் அழிக்கப்பட்டதன் நிமித்தம் டச்சுக்காரர் அதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய சில உத்தரவுகளையும் நடை முறைப் படுத்தி உள்ளார்கள். 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளிலேயே

பனை வளத்தினை அழிப்பதனால் ஏற்படக்கூடிய பாரிய நட்டங்கள் உணரப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகின்றது. மேலும் இக்காலகட்டத்தில் பனந்தும்பில் இருந்து பயனைப் பெறும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கணிசமான பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றது. 1891ஆம் ஆண்டு 9,028 அந்தராயிருந்த பனந் தும்பு ஏற்றுமதி 1892 இல் 12177 அந்த

**தமிழ்ப் பிரதேசங்களில் கிடைக்கப் பெறும் பொருளாதார வளர்ச்சிகளை இனம் கண்டு அதனை விருத்தி செய்து தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தி அடையச் செய்வதில் இலங்கையின் சுதந்திரத்திற்குப்பின்பு ஆட்சி பீடம் ஏறிய எந்த ஆட்சியாளரும் அக்கறைப்படவில்லை.**

ராக உயர்வடைந்துள்ளது. இதனால் பெறப்பட்ட வருமானம் 122,559 ரூபாவில் இருந்து 156,672 ரூபாவாக உயர்வடைந்தது. இங்கு னந்தும்பிற்கான கேள்வி அதிகரிக்கப்பட்டமையினால் ஏராளமான இளம்பனைகள் சேதப்படுத்தப்பட்டமை வ ந்தத்தக்க விடயமாகும். இதனைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்றுமதியாகும் பனந்தும்பின் அளவினை 4000 அந்தர்களாக பிரித்தானியர் கட்டுப்படுத்தினர்.

மேலும் 1916 ஆம் ஆண்டில் பனையில் இருந்து பெறப்படும் பதநீரைக்கொண்டு பனஞ்சீனி உற்பத்தி செய்யும் முறையும் ஆரம்பிக்கப்பட்டது. சீனிச் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றும் இக்காலப் பகுதியில் வல்வெட்டித்துறையில் ஆரம்பிக்கப்பட்டது. இதன்விளைவாக பல தமிழ்பேசும் மக்கள் வேலைவாய்ப்பினை பெற்றதுடன், பதநீர் இறக்குபவரும் கணிசமான, நிலையான வருமானத்தினைப் பெற்றனர். இதன் பின் 1956களில் பொலிகண்டியில் ஒரு சீனித்தொழிற்சாலை உருவாக்கப்பட்டது. இதனை அடுத்து வந்த காலப்பகுதிகளில் பனை வள உற்பத்திகள் யாவும் தமிழ் மக்களினால் கைவிடப்படும் ஒரு நிலை காணப்படுகின்றது இந்நிலை தோன்றியதற்கான மிகமுக்கிய காரணம் தமிழ் மக்களின் பொருளாதார அன்னியப்படுத்தலே. அதாவது தமிழ் பிரதேசங்களில் கிடைக்கப் பெறும் பொருளாதார வளர்ச்சிகளை இனங்கண்டு அதனை விருத்தி செய்து தமிழ்ப் பிரதேசங்களை அபிவிருத்தி அடையச் செய்வதில் இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்பு ஆட்சிபீடம் ஏறிய எந்த ஆட்சியாளரும் அக்கறைப்படவில்லை என்பது தமிழ் மக்களின் பொருளாதார

மழுங்கடிக்கச் செய்யும் ஒரு சதி முயற்சி ஆகும் என்பது வெள்ளிடை மலையாகின்றது.

இதிலும் வருந்தக் கூடிய விடயம் யாதெனில், இப் பனை வள உற்பத்திகள் ஊக்குவிப்புகள் பற்றி தமிழர்கள் பிரதிநிதிகளாக பாராளுமன்றம் சென்ற உறுப்பினர் கூட எது வித அக்கறையும் காட்டாததே. அவ் அரசியல் வாதிகள் யாவரும்

**பனைவளத் தொழில் நன்கு அபிவிருத்தி செய்யப்படும் போது அதன்மூலம் பெறப்படும் பொருளாதார நன்மைகள் யாவும் தமிழ்ப்பகுதிகட்கு அதிலும் சிறப்பாக யாழ்ப்பாண மாவட்டத்துக்கே தனியுரிமையுடைய ஒன்ருக மிளிரும்,**

தமது வர்க்கங்களைப் பாதுகாப்பதில் அக்கறை செலுத்தினர்களே தவிர தமிழ் மக்களின் அடிப்படைப் பொருளாதார வளங்களைப் பற்றி எது வித தீர்க்கதரிசனமும் இன்றித் தமது காலத்தினை கழித்து விட்டார்கள் மேலும் இந் நிலைமைகளைத் தொடர்ந்து 70 - 77 காலப் பகுதிகளில் உள் நாட்டு கைத்தொழில்களை ஊக்குவிக்கும் பொருளாதாரக் கொள்கை காரணமாகவும், உலக சந்தையில் சீனியின் விலை உயர்வடைந்ததினால் அதன் இறக்குமதியினைக்கட்டுப்படுத்தும் நோக்குடனும் பனைவளங்களின் உற்பத்தியில் அரசு சிறிதான அக்கறை காட்டியது. இதன் விளைவாக இக் காலப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் 60 பனங்கட்டி, சீனி உற்பத்தி நிலையங்கள் இயங்கின.

எனினும் மேற் கூறிய எடுத்துக் காட்டுகள் மத்தியிலும் ஒட்டு மொத்தமாக நோக்குமிடத்து பனை வழங்கும் பொருளாதார வாய்ப்புகளை பூரணமாகப் பயன்படுத்தா விட்டாலும், ஓரளவிற்கேனும் அதன் வாய்ப்புகளை பெற முயற்சித்திருக்கிறுர்கள் என்றே கூற வேண்டும். இருப்பினும் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்களில் ஓர் அரைகுறைத் தன்மை அல்லது போதாத் தன்மை என்பன காணப்படுவது வெளிப்படையாகும். குறிப்பாக சொல்லப் போனுல் பனை வளத் தொழில் தமிழ்ப் பிரதேசங்களின் தனி உரிமை என்ற உணர்வு உணரப்பட்டு அதற்குரிய முறையில் நடவடிக்கைகள் அமைந்தன என்பதற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவாகவே காணப்பட்டு வருகிறது.

## திட்டமிட்ட அபிவிருத்தி

இப்பனை வளத்தின் பயன்கள் பிரதேச ரீதியாக தமிழர் வாழும் வாய்ப்புகளைத் திட்டமிட்ட

பிரதேசங்களைச் சார்ந்தும், இன்னும் சிறப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் செறிந்திருப்பதும் பனை வளத்தின் பயன்களை தமிழ் மக்கள் அனுபவிப்பதற்குக் கிடைத்த ஒரு பெரும் வாய்ப்பே ஆகும். இத்தகைய வாய்ப்பினைப் பற்றி மேலும் விரிவு படுத்தி ஆராயும் போது இலங்கையின் மொத்தப்பனைமரங்களில் 99சத வீதத்திற்கும் மேற்பட்ட அளவு தமிழர் பெரும்பான்மையாக வாழும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் காணப்படுவது தமிழ் மக்களுக்குரிய ஒரு தனிப்பட்ட வாய்ப்பேயாகும். மேலும் மொத்த பனை விளை பரப்பில் 75 சத வீதத்திற்கும் மேற்பட்ட அளவு யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படுவதும் தமிழரின் பொருளாதார வாய்ப்பிற்கும் மிகவும் உசிதமான ஒரு விடையாக அமைகின்றது. இவ்வாறான இயற்கை நிலைமைகளின் கீழ் நோக்கும் இடத்து பனை வினைத்தொழில் நன்கு அபிவிருத்தி செயயப்படும் போது அதன் மூலம் பெறப்படும் பொருளாதார நன்மைகள் யாவும் தமிழ்ப் பகுதிகட்கு அதிலும் சிறப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திற்கே தனியுரிமை உடைய ஒன்றாக மிளிரும் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும். இதனால் பனைவள உற்பத்திகளை நன்கு திட்டமிட்டு அபிவிருத்தி செய்வது எமது பொருளாதாரத்திற்கு வேண்டிய ஒரு முன் நிபந்தனையாகின்றது.

---

**யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் சராசரியாக 10 முதல் 15 பனைகள் வரை தறிக்கப்படுவதாகவும் இவ்வேகம் தொடர்ந்து பேணப்படும் போது யாழ்ப்பாணத்தின் பனைகள் ஏறக்குறைய இன்னும் ஒன்றரைத் தசாப்தத்தினுள் முற்றாகவே அழிந்துவிடக்கூடிய சூழ்நிலையும் உருவாகிவிடும்.**

---

எமது பிரதேசத்திற்கே தனித்துவமுடையதான இப்பனை வள உற்பத்திகள் இதுவரை காலமும் எவ்வளவு தூரம் முழுமையாகப் பயன் படுத்தப் பட்டுள்ளது என்பதனை ஆராயும் இடத்து, பனையின் பரம்பல் யாழ்ப்பாண மாவட்டத்தில் செறிந்து காணப்பட்டாலும் அதில் ஏறக்குறைய 4 சத வீதம் தான் ஏதாவது உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுத்தப்படுகிறது. என்பது அதன் பாரதூரமான புறக்கணிப்பு நிலையைப் புலப்படுத்துகிறது. பனம் பொருள் உற்பத்திகளில் பிரதான இடம் வகிக்கும் கள், பதநீர் என்பவற்றைப் பெறுவதற்கு யாழ்ப்பாணபிரதேசத்தில்உள்ளபனைகளில்2சதவீதத்

## முப்பாலில் பனை ● க. செல்வி, பீ. ஏ.

திருவள்ளுவர் அருளிச் செய்த முப்பால் என்னும் திருக்குறளில் பாலுக்கொன்ருக மூவிடங்களில் பனையைப் பற்றிப் பாடியுள்ளார். பெரியதுக்குப் பனையையும், சிறியதுக்குத் தினையையும் திருவள்ளுவர் உவமை கூறியுள்ளார். முதலில் அறத்துப்பாலில் செய்நன்றியறிதல் என்னும் அத்தியாயத்தில் பயன் தெரிந்தவர்களுக்குத் தினையளவு நன்றி செய்தால் போதும். அதனை அவர்கள் பனையளவாகப் போற்றுவர் என்பதாகும். பனை செய்யும் நன்றியுபசாரம் அளவிடற்கரியது.

''தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்''

பொருட்பாலில் குற்றங் கடிதல் என்னும் பகுதியில் பழிக்கு நாணுவோர் தாம் செய்யும் ஒரு சிறு குற்றம் தினையளவாக இருப்பினும் அதனை பனையளவாகக் கருதிக் கவலை கொள்வர் எனப்படுகிறது.

''தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத் துணையாக்
கொள்வர் பழி நாணுவார்''

காமத்துப்பாலில் புணர்ச்சி விதும்பல் என்னும் அதிகாரத்தில் தலைவி காமம் பெரிதும் உடையவளாய் இருப்பின் அவள் தினையளவுதானும் ஊடல் செய்யலாகாது என்கிருர் வள்ளுவர்.

''தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்
காமம் நிறைய வரின்''

---

திற்குக் குறைவாகவே பயன்படுத்தப்படுகிறது. ஆனல் இதில் 8 சத வீதம் மட்டுமே பயன்படுத்தப்படுமாயின் யாழ்ப்பாண மாவட்டத்தின் சீனித் தேவையே பூர்த்தி செய்யப்படும் என்பது குறிப்பிடப்படக் கூடிய அம்சமாகும். மேலும் இவ் வகையில் ஏறத்தாழ 25சத வீதம் பயன் படுத்தப்படுமாயின் முழு தமிழீழத்திற்கும் தேவையான சீனித் தேவையில் தன்னிறைவு அடைந்துவிட முடியும் என்பதும் வரவேற்கத்தக்க உண்மையாகின்றது. இதை விட மேற்பட்ட அளவினை நாம் பயன்படுத்த முற்படுவோமாயின் சீனி உற்பத்திகள் யாவற்றினையும் ஏற்றுமதி செய்து அதிகளவு அன்னியச் செலாவணியை சம்பாதிக்க முடியும். இவ்வாருன உண்மைகட்கு உயிர் கொடுக்கும் நடவடிக்கைகட்கு எமது பொருளாதாரத்தில் அக்கறையுடைய எக் கட்சிக் காரரும் பாடுபட்டு உழைக்க வேண்டும். சிறப்பாக பனைவள அபிவிருத்தியினை விரிவுபடுத்தவென உருவாக்கப்பட்டுள்ள சகல நிறுவனங்களும் முன் வர வேண்டும்.

இவ்வாறாக பனை வள அபிவிருத்திகள் சரியாக மேற்கொள்ளப்படாத நிலையில் மறுபுறம் திட்டமிடாத வகையிலான பனைகளின் அழிப்பு பனைத் தொழில் நிலைத்திருப்பதையே பயமுறுத்திக் கொண்டிருக்கின்றது, யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் நாளாந்தம் சராசரியாக 10 முதல் 15 பனைகள் வரை தறிக்கப்படுவதாகவும் இவ் வேகம் தொடர்ந்து பேணப்படும்போது யாழ்ப்பாணத்தின் வளம் ஏறக்குறைய ஒன்றரைத் தசாப்தத்தினுள் முற்றாகவே அழிந்து விடக்கூடிய சூழ்நிலையும் உருவாகிவிடும்.

## நிறுவனமட்ட முயற்சிகள்

இவ்வாறாக ஆபத்தான தன்மைகளின் கீழ் பனை வளத்தினை மேம்படுத்துவதற்கான நிறுவன மட்டத்திலான முயற்சிகள் இலங்கையின் சுதந்திரத்திற்குப் பின்னர் முற்றாகவே திட்டமிடப்பட்ட மாதிரி கைவிடப்பட்டு வரப்பட்டன. தமிழரின் பொருளாதாரத்திற்குரிய ஒரு சாபக் கேடாகும் இருப்பினும் 1970களில் இலங்கையில் ஆட்சி பீடம் ஏறிய அரசிற்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக உள்ளூர் உற்பத்திகளை ஊக்கப்படுத்த வேண்டிய நிலை உருவாகியது இப் பின்னணியில் தமிழ்ப் பிரதேசங்களின் நில வளங்களும் கவனிக்கப்படும் ஒரு நிலை உருவாகியது. இக் காலப் பகுதியிலேயே முன்னர் கூறப்பட்டுள்ளவாறு யாழ். மாவட்டத்திலே மட்டும் 60 பனங்கட்டி சீனி உற்பத்தி நிலையங்கள் உருவாக்கப்பட்டன, இன்னும் சிறப்பாக கூறப்போனால் அரசினால் பனைத் தொழிலை மேம்படுத்துவதற்காக நிறுவன மட்டத்திலான முயற்சிகள் மிகவும் காலம் தாழ்த்தியே தொடக்கப்பட்டதனை உணரமுடிகின்றது.

பனைவள வளர்ச்சியுடன் அடையாளம் காணப்படக் கூடிய நிறுவனங்கள் எதுவும் 1970களின் ஆரம்பகாலம் வரை பனை வளத்தினைப் பற்றி அவ்வளவு தூரம் அக்கறைப்பட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை. உதாரணமாக அத்தகைய நிறுவனங்களுள் நேரடி முக்கியத்துவம் வாய்ந்த பனை அபிவிருத்திச் சபை 1978 ஆம் ஆண்டு வரை ஆரம்பிக்கப்படவில்லை என்பதுடன், பனைத் தொழில் தொடர்பான அதன் பிரதான அபிவிருத்தி நடவடிக்கைகள் 1981 ஆம் ஆண்டின் முடிவுக் கட்டம் வரை உரியமுறையில் விருத்தி செய்யப்படவும் இல்லை. இதற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் இருந்தே நிறுவன ரீதியிலான அபிவிருத்தி நடவடிக்கைகள் ஓரளவிற்கு உற்சாகமடைந்து வருகின்றன. இவ்வாறாக ஏற்பட்டுள்ள உற்சாக நிலைமையினை மேலும் விரிவுபடுத்தி பனைவள உற்பத்திகளைப் பாதுகாக்க வேண்டிய மிகவும் பாரிய

பொறுப்பினை பனை அபிவிருத்திச் சபை நிச்சயமாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இவ் அபிவிருத்திச் சபையானது தமிழ் மக்களின் பொருளாதாரத்துடன் தொடர்புடையதாக அமைவதினை இச்சபையில் கடமை புரியும் ஒவ்வொரு ஊழியரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சுருக்கமாகக் கூற முற்படும் இடத்து பனை அபிவிருத்திச் சபையானது எமது பிரதேசப் பொருளாதாரத்தின் மூலாதாரத்தில் முக்கியமானது என்றே கூற வேண்டும்.

இவ்வாறான மறைமுகமான பொருளாதார வாய்ப்புகளை உணராத சில சக்திகள் இச்சபையின் அபிவிருத்தி வேலைகள் தடைப்படும் சில நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது வருந்தத்தக்க விடயமாகும். இச்சபையின் அபிவிருத்தி வேலைகட்காக மிகவும் குறைந்த மட்டமாக உபயோகிக்கப்படும் வாகனங்களையோ, அல்லது அலுவலக கருவிகளையோ அபகரிப்பது எமது பொருளாதாரத்தினையே குழி தோண்டிப் புதைக்கும் நடவடிக்கையாகும். இவ்வாறான தவறுகட்கு யாராவது காரணமாக அமைந்திருந்தால் அவர்கள் எமது பொருளாதார நன்மை கருதி அவ்வாறான தவறுகளை நீக்குவது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.

இதுகாறும் ஆராயப்பட்டுள்ள உண்மைகளை ஏற்றுத் தமிழ் பேசும் ஒவ்வொருவரும் பனை வள உற்பத்தியினை ஊக்குவிக்கத் தங்களால் இயன்ற பங்களிப்பினை செய்து எமது பொருளாதாரத்திற்கு அடிகோல வேண்டியது ஒவ்வொரு பொறுப்புடைய தமிழ் பிரஜையினதும் கடமையாகும்.


எம் முன்னோர் நீண்ட ஆயுளுடன்
வாழ்ந்த இரகசியம்
இது தான்

நீங்களும் பனம் பண்டங்களையே
பாவியுங்கள்!
ஏற்றுமதி உற்பத்தி கிராம (மக்கள்) கம்பனி
சாவகச்சேரி

# பிரபஞ்ச சிரிப்புகளும் சிந்தனைகளும் — எஸ். ஜே. ஜே,

9

(லா போந்தேன் என்ற பிரெஞ்சுக் கவிஞர் செய்யுள் வடிவில் 1621—1695 க்களில் குட்டிக் கதைகளை எழுதினர். 12 பாகங்கள் கொண்ட அந்தக் கதைகள் மூன்று புத்தகங்களாக வெளிவந்தன. கடந்த இதழில் இவரது சில குட்டிக்கதைகளைச் சுவைத்தீர்கள். இம்முறையும் அவரது சில குட்டிக்கதைகளைச் சுவைப்போம்.)

## ● செருப்புத் தைப்பவனும் பணக்காரனும்

செருப்புத் தைக்கும் ஒருவன் தினந்தோறும் அதிகாலையிலிருந்து இரவு வரை எவ்விதக் கவலையும் இல்லாமல் சந்தோஷமாகப் பாடிக் கொண்டேயிருப்பான். பக்கத்தில் ஒரு பெரிய மாளிகையில் ஒரு பணக்காரன் வசித்து வந்தான். அவனுக்கு இரவில் சரியாகத் தூக்கம் வராது. அதிகாலையில் தான் சிறிது கண்ணயர்வான். அந்தச் சமயம் பார்த்துச் செருப்புத் தைப்பவன் பாட ஆரம்பித்து விடுவான். பணக்காரனின் தூக்கம் கலைந்து விடும்.

இப்படியே பல நாட்கள் நடந்து கொண்டிருந்தது. ஒருநாள் அவன் செருப்புத் தைப்பவனைத் தனது மாளிகைக்கு வரவழைத்து ''உனது வருட வருமானம் எவ்வளவு? '' என்று கேட்டான்

நான் வருஷக்கணக்கெல்லாம் பார்ப்பது கிடையாது. அன்றாட வருமானம் தான் எனக்கு. அதுவும் ஒருநாள் கிடைக்கும்; ஒருநாள் கிடைக்காது, என்றான் செருப்புத் தைப்பவன்.

'உன்னை நான் ஒரு பணக்காரனாக்க விரும்புகின்றேன். இதோ நூறு தங்க நாணயங்கள் இருக்கின்றன. இவற்றைக் கொண்டு போய்ப் பத்திரமாக வைத்துக் கொண்டு அவசியம் நேரும்போது செலவு பண்ணிக்கொள்' என்று சொல்லிப் பணக்காரன் தங்க நாணயங்களைக் கொடுத்தான்.

செருப்புத் தைப்பவன் கரைகாணாத சந்தோஷத்துடன் தங்க நாணயங்களைக் கொண்டு வந்து தன் வீட்டில் பத்திரமான ஓரிடத்தில் அவற்றைப் புதைத்து வைத்தான். அன்று முதல் அவன் பாடுவதை

நிறுத்தி விட்டான். அவனுக்கு எப்போதும் தங்கநாணயங்களைப் பற்றியே ஞாபகம். அவற்றைக் காவல் செய்வதைத் தவிர வேறு வேலை எதுவும் செய்ய முடியவில்லை. எவனும் வந்து திருடி விடக் கூடாதே என்று இரவிலும் அவன் கண் விழித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பான். ஒரு சிறு சலசலப்புக் கேட்டாலும் ஓடிப்போய்த் தங்க நாணயங்கள் பத்திரமாக இருக்கின்றனவா என்று பார்த்து விட்டு வருவான்.

இப்படி மன நிம்மதி இழந்து கவலையிலும், பயத்திலும் காலம் தள்ள அவனால் முடியவில்லை. ஒருநாள் தங்க நாணயங்களை எடுத்துக் கொண்டு பணக்காரனுடைய மாளிகைக்குப் போனான். 'ஐயா நீங்கள் கொடுத்த இந்த நூறு தங்க நாணயங்களையும் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள். என்னுடைய பாட்டையும், என்னுடைய நித்திரையையும் எனக்குத் திருப்பிக் கொடுங்கள்,' என்றான்.

## ● சேவலும் பூனையும்

ஒரு சிறு எலிக்குஞ்சு ஒருநாள் தன் தாயிடம் பின்வருமாறு சொன்னது:—

இன்று நான் இரண்டு மிருகங்களைப் பார்த்தேன். ஒரு மிருகம் பயங்கரமாக இருந்தது. மற்றொன்று மிகவும் சாது. பயங்கரமான மிருகத்திற்குத் தலையில் கொண்டை இருக்கிறது. கத்தி மாதிரி வாய் இருக்கிறது. அது சிறகை அடிக்கிறது. அப்போது கூவுகிறது. அதைக் கேட்டதும் நான் பயந்து ஓடிவந்துவிட்டேன். அந்தப்பயங்கர மிருகம் அங்கு இல்லாமல் இருந்திருந்தால் நான் அந்தச் சாது மிருகத்தினிடம் போய்ச் சிநேகிதம் பண்ணியிருப்பேன்.

அதன் உடம்பு நம் உடம்பைப் போல் மிருதுவாக இருக்கிறது. உடம்பில் கோடுகள் இருக்கின்றன. அதற்கு நீளமான வால் இருக்கிறது. முகத்தைப் பார்த்தால் சாந்தமாக இருக்கிறது. அதன் பக்கத்தில் போய்க் கொண்டிருக்கும் போதுதான் அந்தப் பயங்கர மிருகம் கூவியது. நானும் பயந்து ஓடிவந்து விட்டேன்.

குஞ்சு சொன்னதை நன்றாகக் கேட்டுக் கொண்ட எலி சொன்னது "நல்ல வேளையாக நீ ஓடி வந்தாய், குழந்தாய், நீ சாது மிருகம் என்று சொன்னாயே அது உண்மையில் சாதுவல்ல. மகா கபடமான பிராணி. அது நம் கூட்டத்திற்குப் பரம விரோதியான பூனையாகும். மற்றோர் மிருகத்தைப் பற்றிச் சொன்னாய். அது ஒரு மிருகமல்ல. சேவல்; அது நமக்கு ஒரு தீங்கும் செய்யாது. இனிமேல் நீ வெளித் தோற்றத்தைக் கண்டு யாரைப்பற்றியும் முடிவுகட்டி விடாதே'.

## ● போருக்குப் புறப்பட்ட சிங்கம்

ஒரு சிங்கம் போருக்குப் புறப்பட்டது. அப்போது ஒவ்வொரு மிருகத்திற்கும் அது கட்டளையிட்டது.

''யானையே! நீ உன் முதுகில் யுத்தத் தளபாடங்களை சுமந்து வரவேண்டும். எதிரிகளையும் நீ தாக்க வேண்டும்''

''கரடியே! நீ எதிரிகளைச் சூறையாடுவதற்குத் தயாராக இருக்க வேண்டும்''.

''நரியாரே! நீ போர்த் தந்திரங்களையெல்லாம் கற்றுத்தர வேண்டும்''

''குரங்கே! நீ எதிரிகளுக்கு விளையாட்டுக் காட்டி அவர்களின் கவனத்தை வேறு பக்கம் திருப்பவேண்டும்.''

சிங்கம் இப்படி உத்தரவு போட்டுக் கொண்டிருக்கும் போது ஒரு மிருகம் அதைப் பார்த்து, ''நமது படையில் கழுதைகளைச் சேர்க்க வேண்டாம். கழுதைகளுக்கு மூளை கிடையாது. முயல்களோ மகா கோழைகள்'', என்று சொன்னது.

அதைக் கேட்ட சிங்கம், ''இல்லை, இல்லை நான் எல்லாப் பிராணிகளையுமே பயன்படுத்துவேன். கழுதை எதிரிகள் நடுங்கும்படி எக்காள நாதம் செய்யட்டும். வேகமாக ஓடக்கூடிய முயல் போர்க்களத்திலிருந்து நான் அனுப்பும் உத்தரவுகளைச் சுமந்து வரட்டும்'', என்று கூறியது.

புத்திசாலிக்கு எதுவும் பயனற்றதல்ல.

(அடுத்த இதழில் : திபெத்தியக் கதைகள்)

# பலப்பல!

## பிறவிப் பிணி நீங்க....

கிரேக்க நாட்டில் பண்டைக் காலத்தில் ஒருநாள் ஒருவன் தனது நாய்க்குட்டியை அடித்துக் கொண்டிருந்தான். அப்போது அந்தப் பக்கமாக வந்த பைதகோரஸ், ''ஓ, அவனை அடிக்காதே. அவன் என் ஆருயிர் நண்பன் அவனுடைய ஆத்மாதான் இந்த நாய்க்குள் இருக்கிறது,'' என்றார்.

பைதகோரஸைப் பைத்தியம் என்று எண்ணியவர்கள் கிரேக்க

– 41-ம் பக்கம் பார்க்க

## காகம் இல்லாத தீவு...

ஆறுமைல் சுற்றளவும் ஒன்றரைமைல் நீளமும் உள்ளது லட்சத் தீவுகளில் ஒன்றான கவரத்தீவு. முஸ்லிம்கள் மட்டுமே வசிக்கின்ற இத் தீவில் காகம் கிடையாது இங்கு எத்தனை காகங்களைக் கொண்டு வந்து விட்டாலும் இத்தீவில் நிலவும் ஒரு கால நிலையால் அவை செத்து விடுகின்றன. அணில், ஊர்க்குருவி, நாய் முதலியவையும் இத்தீவில் கிடையாது.

## எவரெஸ்டிலும் உயர்ந்த சிகரம்...

உலகத்திலுள்ள சிகரங்களில் எது உயர்ந்தது என்று கேட்டதும் சிறு குழந்தைகள் கூட எவ

– 41-ம் பக்கம் பார்க்க

# 'கற்பகம்' ஏடு நாட்டிற்கு என்றும் நன்கு பொருந்துகவே...

"கற்பகமே அற்புதமே காதற் கரும்பனையே!
கற்றவர்கள் கற்பனையைக் காண்பனையே –கற்பகமாம்
ஏட்டின் எழுத்திற்கு என்றும் இலக்காகி
நாட்டிற் பொருந்துகவே நன்கு".

இவ்வாறு கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை அவர்கள் தமது கவின் மழையால் 'கற்பகம்' முதல் இதழுக்கு ஆசி கூறிப் பாடினார்.



அவர் ஆசி பெற்று வெளி வந்த "கற்பகம்" நாட்டிற்கும், வீட்டிற்கும் நன்றாகவே பொருந்தி என்றென்றும் எவரும் போற்று தற்குரிய முறையில், இன்றும் வெளிவந்து கொண்டிருக்கின்றது. 'கற்பக'த்திற்கு என்றும் அவர் ஆசி நிலைத்திருக்க வேண்டும்.

கவிஞர் அவர்கள் இன்று நோய்வாய்ப்பட்டு யாழ். அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுச் சிறிது சிறிதாகக் குணமடைந்து வருகிறார். அவர் விரைவில் பூரண குணமடைந்து கற்பகம்' வாசகர்களுக்கு மேலும் பல அற்புதப் பாடல்களை அள்ளி வழங்க வேண்டுமென ஆண்டவனை நாமெல்லோரும் பிரார்த்திப்போம்.

---

# பனம்பழமும் தேங்காயும் ஒரே விலை?



பனம் பொருள் அபிவிருத்திச் சபையால் நடாத்தப்படும் அரியாலை 'பனம் பானம்' உற்பத்தி நிலையத்தில் பனம்பழம் ஐம்பது சதத்திற்குக் கொள்வனவு செய்யப் படுகின்றது. அப்பகுதியில்

– 41 -ம் பக்கம் பார்க்க

## பனம்பழமும்....

– 40 -ம் பக்கத் தொடர்

தேங்காயும் ஐம்பது சதத்திற்கே விலை போனது.,

தென்னிலங்கையில் பனம்பழம் ஒன்று இரண்டு ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது என்று பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் தெரிவிக்கிறார்.

காலக்கிரமத்தில் பனம் பழத்தை அடிப்படையாகக் கொண்டு சபையினால் உற்பத்தி செய்யப்படும் ஜாம், சோஸ், கோடியல், கிரஷ் போன்ற பொருட்களின் உற்பத்தி அதிகரிக்கப்படும் போது பனம் பழத்தின் விலை தேங்காயின் விலையைத் தாண்டிவிடும் என்று தான் நம்புவதாகவும் அவர் கூறினார். இதனாலேயே பெண்பனைகளைத் தறிப்பதற்குத் தடை விதித்துள்ளோம் என்றும் பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் குறிப்பிட்டார்.

## எவரெஸ்டிலும்....

– 39-ம் பக்கத் தொடர்

ரெஸ்ட் என்று கூறி விடுவர். ஆனால் இப்பதில் தவறு என்று தகவலொன்று கூறுகின்றது.

எவரெஸ்டை விட உயரமான சிகரத்தின் பெயர் 'மௌனக்கி' என்பதாகும். இது பசுபிக் மகா சமுத்திரத்திலிருக்கும் வட மத்திய ஹவாய் தீவில் அமைந்திருக்கிறது. இதன் உயரம் சுமார் 32,000 அடிகள். எவரெஸ்ட்டின் உயரம் 29,000 அடிகள் மட்டுமே. மௌனக்கியின் அடிப்பாகம் சுமார் 18,000 அடிகள் கடலில் மூழ்கியுள்ளது.

## பிறவிப்பிணி....

–39-ம் பக்கத் தொடர்

நாட்டில் பலர் இருந்தனர். பைதகோரசும், அவரது கொள்கைகளைப் பின்பற்றியவர்களும் சொல்லிவிட முடியாத அளவு கொடுமைகளுக்காளானார்கள். ஆனால் அவரின் கொள்கைகள் இன்றளவும் உயிர் வாழ்கின்றன. அவருக்குப் பின்னால் தோன்றிய ஞானிகள் சோக்கிரட்டீஸ், பிளேட்டோ ஆகியோரும் பைதகோரஸின் கொள்கைகளைக் கற்றுணர்ந்து பயன் பெற்றார்கள்.

பைதகோரஸ் மனிதனுடைய ஆன்மா, மறுபிறவி எடுத்துப் பூமிக்கு வருகிறது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். மனிதன் பிறவியின்றி முடிவைக் காண வேண்டுமானால் அவன் இறைவனை வேண்டுமென்று அவர் கருதினார்.

## ஞாபக சோதனை!

ஆசிரியர்:- பழைய ராசதானி ஒன்று சொல் பார்க்கலாம்.

மாணவன்:- அனுராதபுரம்


ஆசிரியர்:- கெட்டிக்காரன். நீ ஒருவன் தான் படிப்பித்ததை ஞாபகத்தில் வைத்திருக்கின்றாய்.

மாணவன்;- படிப்பித்த ஞாபகம் இல்லைசேர் கொழும்புக்குப் போகும் வழியில் சோதனைக்காக இறங்கி ஏறிய ஞாபகம்தான்.

ஆசிரியர்:- ??????

- கே. தேவானந்தன்.

# உங்களுக்கு ரூபா 100/- பரிசு காத்திருக்கிறது !



இப்படத்தில் காணப்படும் பெட்டியில் இருப்பது என்ன? இப்பெட்டியில் இருப்பது 'கற்பகதரு'வின் சிறந்த உற்பத்திகளில் ஒன்று. இதுபற்றி நான்கு வரிகளைக் கொண்ட கவிதை ஒன்று எழுதி அனுப்புங்கள். தெரிவு செய்யப்படும் சிறந்த கவிதைக்கு 100 ரூபா பரிசு வழங்கப்படும். முடிவு திகதி ; 15-12-1985 உங்கள் கவிதைகளை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

ஆசிரியர்
''கற்பகம்' 330, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்

# பெருங்'குடி' மக்கள்!

தமிழ்ச் சமுதாயத்தைக் 'கசிப்பு' பூண்டோடு கருவறுத்து விடுமோ என்று அஞ்சியவர்களுக்கு இளைஞர் அமைப்புக்களின் சமீபத்திய கசிப்பு ஒழிப்பு நடவடிக்கைகள் ஆறுதலளிக்கின்றன. அவர்களின் பணி தொடரவேண்டும் என்று "கற்பகம்" விரும்புகின்றது.

இவ்வேளையில் தரமான சாராயத்தைச் 'சரிக்கட்டி' வழங்க முன்வந்துள்ள தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நன்றி கூறுகிறார்கள் தமிழ் பேசும் பெருங்'குடி மக்கள்.

# மூல வளங்களின் கொள்ளை

தங்களுடைய நாட்டின் இயற்கை மூலவளங்களைப் பன்னெடுங் காலங்களாகப் பயன்படுத்திக் கொண்டுவரும் பெரும் முதலாளித் துவ நாடுகள், தங்களுடைய எத்தகைய கட்டுப்பாட்டிற்குள்ளும் கொண்டுவர விரும்பவில்லை. இப்பயங்கர உண்மையை இயற்கைப் பராமரிப்பில் சர்வதேச ஒத்துழைப்பிற்கு இடப்படும் மறைமுக மான வரம்புகளுக்குள் இம் முதலாளித்துவ நாடுகள் தம்மை மறைத்துக் கொண்டுள்ளன.

'மற்றவர்களுடைய' இயற்கையும், மற்றவர்களுடைய' மூல வளங்களும் எதிர்காலத்தில் அதன் 'சொந்தக்காரர்களுக்கு ஏதா வது மீதி இருக்குமா? என்பதிலோ, குறிப்பிட்ட துறையிலே உயிர் மண்டலத்திற்கு என்ன தீங்கு செய்யப்படுகின்றது என்பதிலோ எந்தவிதமான அக் கறையுமின்றிப் பரஜீவித முறை யில் பயன்படுத்தப் படுகின்றன. உலக ஜனத்தொகை அமெரிக் கர்கள் 5.7 சதவிகிதத்தினர்.

## உலகை எதிர்நோக்கும் பேராபத்து!

அமெரிக்கர் உலகில் பயன்படுத்தப்படும் மூலவளங்களில் 40 சத விகிதத்தைப் பயன்படுத்துகின்றார்கள்.

அமெரிக்கா தான் பயன்படுத்தும் தாமிரத்தில் 25 சதவிகிதத் தையும், அலுமினியத்தில் 80 சத வீதத்தையும், மங்கனீசில் 99 சத வீதத்தையும், பிரமாண்டமான இரும்புத்தாதுக்களை யும் வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறது. தொழில் துறையில் முன்னேற்ற மடைந்த நாடுகளின் செயல்முறை தவிர்க்க முடியாத படி உலகனைத்தையும் காலியாக்குகின்றது என்பதை மீண்டும் நிரூபிக்கின்றது. இயற்கை மூலவலங்களின் பயன்பாடுகள் பற்றிய பிரச்சினைகள் வெகுகாலத்துக்கு முன்பே சர்வதேச பிரச்சினைகள் ஆகிவிட்டன. (ஐ. லாப் தேவின் 'பகுத்தறிவின் கிரஹம்' என்ற நூலிலிருந்து)

# பனம் பொருள் கடத்தல்...?

"...83 வயதடைந்த (முன்னாள் பிரதமர்) டாக்டர் தஹநாயக்கா இந்த வயதிலும் சுகபலம் பெற்றிருப்பதற்கு சீனி, மா, வெள்ளை அரிசி போன்ற வெள்ளையரை உணவிலிருந்து வெளியேற்றியதே முக்கிய காரணமென்கிறார்.

தமிழ் - சிங்கள பேதம் என்னவானாலும், வெள்ளைச் சீனிக்கு ஒரு போட்டியாகப் பல சிங்கள மக்கள் விரும்பும் கருப்பட்டி, பனங்கட்டி, பனஞ்சீனி உற்பத்தியைப் பெருக்குவது உசிதம்.

பனம் பொருள்கள் கடத்தலுக்குரிய கவர்ச்சி பெறுதிருப்பது குறிப்பிடத்தக்கது.''

('ஈழநாடு' – 26.10.85 ஆசிரிய தலையங்கம்.)

## இன்று செய்தி நாளை வரலாறு

# ஒக்டோபர்

14. வடக்கு, கிழக்கிலுள்ள 16 பாராளுமன்றத் தொகுதிகளுக்கும் விரைவில் பொதுத் தேர்தல்களை நடாத்த அரசாங்கம் முடிவு.

⌘ இந்தியஉதவி மறுக்கப்பட்டாலும் தமது இயக்கம் தொடர்ந்து போராடுமென்று தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரன் அறிவித்துள்ளார்.

15. யாழ்ப்பாணப் பகுதிகளில் தொடர்ச்சியாக நடந்து வரும் கொள்ளைச் சம்பவங்களினால் பதற்றமடைந்த மக்கள் வீதிகளில் தடைபோட்டு வழிமறிப்புப் போராட்டம் நடாத்தித் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

17. யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குப் பூரண சுதந்திரம் உண்டு என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி கூறினார்.

21. பஹாமாவில் இந்தியப்பிரதமர் ராஜீவ் – ஜே. ஆர். இனப்பிரச்சினை பற்றி 70 நிமிடம் உரையாடினர்.

23. இருவாரத்தில் 160 தமிழர் ஆயுதப்படையினரால் கைது. 45 அப்பாவிகள் 11 போராளிகள் 11 நாட்களில் சுட்டுக்கொலை என்று மதுரை தமிழீழ தகவல் நிலையம் அறிவித்தது.

26. கிளிநொச்சியில் 4 புகையிரதப்பகுதி ஊழியர்கள் கடத்தப்பட்டதால் வடபகுதி ரயில் சேவை ரத்துச் செய்யப்பட்டது.

28. அவசியம் ஏற்படின் அரசியல் கோட்பாட்டையும் மீறத் தயார் என்று ஜனதிபதி ஜே. ஆர். அறிவித்துள்ளார்.

29. கிளிநொச்சியில் கடத்தப்பட்ட 4 புகையிரத நிலைய ஊழியர்களும் விடுதலை செய்யப்பட்டனர்.

30. இந்திய காமராஜ் காங்கிரஸ் தலைவர் ப. நெடுமாறன் தமிழ்ப்பகுதிகளில் 20 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பின் அறிக்கை விடுத்தார்.

## இன்றே வாங்குங்கள்!

சுவைமிகு பனம் உணவுப் பண்டங்கள்

### பனம்பொருள் அபிவிருத்திச் சபையின்

விசேட தயாரிப்பு

## பாணிப் பனாட்டு

ஊட்டச் சத்துக்களும், உயிர்ச் சத்துக்களும் மிகுந்த

### பனம் சிரப்

சோடாவிற்குப் பதிலாக இல்லந் தோறும் பருகிச்
சுவைத்திடச் சுவையான பானம்

### ★ பனம் கோடியல், பனம் பானம் ★

உங்கள் உணவைச் சுவையூட்ட

### ★ பனம் ஜாம் ★

எமது
'கற்பகம்' விற்பனை நிலையங்களை
நாடுங்கள்

வியாபாரிகளுக்கு கழிவு உண்டு

### பனம் பொருள் அபிவிருத்திச் சபை

தேசிய வீடமைப்புச் செயலகம்
யாழ்ப்பாணம்

தொலைபேசி:- 23801, 22094,



வடமாகாண தெ. ப. பொ. கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தினரால், கண்டி வீதி, யாழ்ப்பாணம் சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ அச்சகப்பகுதியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.